METHODIST GIRLS' HIGH SCHOOL

POINT PEDRO

Magazine 1972—74

Miss Kalanthi Thiruvarangan

CONTENTS

		PAGE
1.	இதழாசிரியர் இயம்புகிறார்	1
2.	பாடசாலைக் கீதம்	2
3.	Annual Prize-Giving July 8th 1973 (programme	3
4.	அதிபர் அறிக்கை 1973	4
5.	Annual Prize-Giving May 20th 1974	8
6.	அதிபர் அறிக்கை 1974	9
7.	The Late Mrs. W. N. S. Samuel (An Appreciation) ...	13
8.	அஞ்சலி செலுத்துகிறோம்	15
9.	நீங்காத நினைவுகள்	17
	மாணவர் பகுதி — தமிழ்	
10	பரந்தன் இரசாயனப் பொருட் கூட்டுத்தாபனம்	19
11.	இலங்கை நம் நாடு	21
12.	புற்றுநோய்	23
13.	மனிதன் வாழ்வில் விஞ்ஞானம்	24
14.	நிலவு விளக்கிய விதி	26
15.	எதிர்கால இலங்கை	27
16.	பூம்புகாரில் இந்திரவிழா	29
17.	அகில இலங்கையிலும் முதலிடம் பெற்ற "பாஞ்சாலி சபதம்"	30
18.	மலைநாடு கண்டேன்	31
19.	நாங்கள் அரங்கேறினோம்	32
20.	அன்று ஓர் இரவு	33
21.	எங்கள் ஊர்	34
22.	கிளி	34
23.	எனது பூந்தோட்டம்	35
24.	வண்டிக்காரன்	35
	Students Section — English	
25.	The Minister Arrives	35
26.	Magic in our School	36
27.	Autobiography of Thambu	37
28.	An Interesting person in my class	38
29.	A Picnic	38
30.	If I were a Doctor	39
31.	An Accident	40
32.	My Birthday	40
33.	All Island Ranger Service Camp. 1973	40
	மன்ற அறிக்கைகள்	
34.	உயர்தர மாணவர் மன்றம்	42
35.	ஒரேஞ்ட மாணவர் தமிழ் மன்றம்	43
36.	Senior English Literary Association	44
37.	வரலாற்று மன்றம்	45
38.	பூவியியல் மன்றம்	46
39.	விஞ்ஞான மன்றம்	47

		PAGE
40.	நுண்கலை மன்றம்	48
41.	சைவ மன்றம்	49
42.	கத்தோலிக்க மாணவர் மன்றம்	50
43.	Students' Christian Movement	51
44.	றெஞ்ஞேர்ஸ் அறிக்கை	52
45.	சிறுதோழர் குழு அறிக்கை	52
46.	வழிகாட்டி இயக்க அறிக்கை	53
47.	Games Report	54
	இல்ல அறிக்கைகள்	
48.	எவறெற் இல்லம்	56
49.	மெக்கற்றேயிட் இல்லம்	58
50.	கிறீன்வுட் இல்லம்	59
51.	பார்க்ஸ் இல்லம்	60
52.	Prefects Guild	61
53.	விடுதி மன்றம்	62
54.	The Late Mrs. Q. A. Shanmuganathan ...	63
55.	The Teachers' Guild ... —	65
56.	கூட்டுறவு வினியோகச் சிக்கனச் சங்கம் ...	66
57.	Achievements 1973 — 1974	67
58.	அகில இலங்கைத் தமிழ்த் தினம் — 1972	68
59.	அகில இலங்கைத் தமிழ்த் தினம் — 1973	68
60.	விவேகானந்த சபை அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சை	69
61.	Examination Results	70
62.	The Staff — 1974	73
63.	Acknowledgement	75

Miss Kalamathi Theivanayagam

ANNUAL PRIZE-GIVING
JULY 8TH 1973

PROGRAMME

Welcome Song

Principal's Report

President's Address

K. POORANAMPILLAI ESQR.
(Principal, St. John's College, Jaffna)

Prize Distribution

MRS. MANICAVASAGAR

Prize Day Address

T. MANICAVASAGAR ESQR.
(Director of Education, Northern Region)

Vote of Thanks

Proposed by the Head Prefect
MISS PRABAVATHY ARULIAH

Seconded by the Hony. Secy. P. T. A.
M. THAMBIMUTTU ESQR.
(D. R. O. Point Pedro)

Entertainment

1. Group Dance:— ....பாலர் களரி
2. English Play:— A Scene from 'Midsummer Nights Dream'
3. Dance Drama:— 'பாஞ்சாலி சபதம்'

National Anthem

அதிபர் அறிக்கையிலிருந்து.....

மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, எமது வித்தியாதிபதி திரு: மாணிக்கவாசகர் அவர்களே, திருமதி மாணிக்கவாசகர் அவர்களே, பெற்றோர்களே, பெரியோர்களே,

உங்கள் யாவரையும் எமது பரிசளிப்பு விழாவிற்கு வரவேற்பதில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்: நீங்கள் இன்று திரளாகக் கூடி வந்திருப்பது எங்களுக்குப் பெரும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தருகிறது: எங்கள் பிரயாசைகளிலே உங்களுக்கிருக்கும் அக்கறையையும் ஆர்வத்தையும் அது எடுத்துக்காட்டுகிறது: ஆண்டு தோறும் உங்கள் ஆதரவை நாங்கள் வரவேற்று எங்களுக்கு வேண்டிய ஊக்கத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம்: எங்கள் நன்றி:

மாணவர் தொகை :

1973-ம் ஆண்டு, ஜூன் மாதத்தில் எங்கள் மாணவர்தொகை 1376 ஆகும்: இதில் கனிஷ்ட பாடசாலையில் 606: சிரேஷ்ட பாடசாலையில் 707. ஒவ்வொரு வகுப்பிலும் வைத்திருக்கக்கூடிய தொகையை மட்டுமே எடுக்கவேண்டியிருந்ததால் அனுமதி கேட்டுவந்த அநேக மாணவிகளை நாங்கள் ஏற்க முடியாதிருந்தமைக்காக வருந்துகிறோம்.

ஆசிரியர் :

கடந்த ஆண்டிலே அநேக இடமாற்றங்கள் ஏற்பட்டன, இருபது வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையில் கடமையாற்றிய திருமதி பிளாஞ்சாட் அவர்கள் 1972 மே மாதம் எங்களைவிட்டுச் சென்றார்கள், அவர்கள் தமது கடமையை உண்மையோடும், விசுவாசத்தோடும், உத்தரவாத உணர்ச்சியோடும் திறப்படச் செய்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்: திருமதி ஜெகானந்த குரு அவர்கள் ஏறக்குறைய இருவருட சேவையின்பின் 1972 டிசெம்பர் மாதம் மாற்றலாகிச் சென்றார்கள். திருமதி ஜேக்கப் அவர்கள் பெப்ருவரி மாதம் இங்கு மாற்றலாகி வந்து டிசெம்பர் மாதம் வேறிடம் சென்றார்கள்: திருமதி பொன்னம்பலம் அவர்கள் ஏறக்குறையப் பதினைந்து வருட சேவையை இப்பாடசாலைக்கு ஆற்றியபின் வேறிடம் மாறிச் சென்றார்கள். கணிதம், பௌதிகம் முதலிய பாடங்களை உயர் வகுப்புகளுக்குப் போதித்துவந்த திரு: சிவன்ரூபன் அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையில் "டிப்ளோமா" செய்வதற்காகச் சென்றிருக்கின்றார்: அவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்: அவர் மறுபடியும் எங்கள் பாடசாலைக்கே அனுப்பப்படுவார் என நம்புகிறோம். கல்வித் திணைக்களத்தின் புதிய மாற்றல் முறையாற் பாதிக்கப்பட்டவர்கள், செல்வி அருள்நந்தி, செல்வி சின்னத்தம்பி ஆகிய இரு ஆசிரியைகள்: செல்வி சின்னத்தம்பி இப்பாடசாலையில் பத்துவருடங்களுக்கு மேலாகச் சேவை செய்தவர்: உயர் வகுப்புகளில் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது: செல்வி அருள்நந்தியும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவை செய்துள்ளார்: ஆங்கில மொழியின் அருமையையும், அழகையும் அநேக மாணவிகட்குப் புகட்டியவர் ஆவர்: அவர் சாரண இயக்கத்தில் மாவட்ட ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்: எமது பாடசாலைச் சாரண இயக்கத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகள் பல. பெருஞ்சேவை செய்த இவ்வாசிரியர்கள் யாவர்க்கும் என் மனமார்ந்த நன்றி:

திரு. R. M. குணரத்தினம் அவர்களுக்கு விசேஷமான நன்றியை மனமுவந்து தெரிவிப்பது எனக்குரிய பெருங்கடமையாகும்: அவரது சேவை கல்வித் திணைக்களத்தின் விசேட அனுமதியோடு எமக்குக் கிடைத்தது நாம் செய்த பாக்கியமே: கௌரவ

ஆசிரியராக எமது விஞ்ஞானப் பிரிவில் ஒருவருடத்துக்கு மேலாக அவர் உதவி புரிந்தார்; ஏனைய ஆசிரியர்களுக்கு மட்டு மன்றி, எனக்குமே அவரது சேவை ஓர் எடுத்துக்காட்டாக விருந்தது. இவ்வருடம் அவரது சேவை கிடையாமைக்காக வருந்து கிறேம்;

திருமதி W. N. S. சாமுவேல் அவர்க ளது மறைவையிட்டு இங்கு ஆழ்ந்த வருத் தமடைகிறேன்; அவர் இப்பாடசாலை யோடு ஏறக்குறைய இருபது வருடங்க ளாகத் தொடர்புடையவர்; பாடசாலை யின் சகல காரியங்களிலும் விருப்போடு பங்குபற்றி, உண்மையான சேவையை அவர் ஆற்றினர்; எல்லாவற்றையும் திறமையாகவும், நிறைவாகவும் செய்ய வேண்டுமென வாஞ்சை கொண்டவர்; தமது உடல் ஆரோக்கியம் குன்றிய காலத் திலும், கடமையைச் செவ்வனே செய்ய ஊக்கம் காட்டியவர்; அவரது சேவைபற்றி விபரமாகக் கூறுவதற்கு நேரமும், இடமும் போதாது; ஆகவே, அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்று சுருக் கமாகக் கூறுகிறேன்;

பரீட்சைப்பேறு : பின்வருபவை எமது பரீட்சைப் பேறுகளாகும்.

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத் தினரால் நடாத்தப்பட்ட 3 ஆம் தரப் பரீட்சையில் தோற்றியோர் 69; சித்தி பெற்றோர் 69; அ பிரிவு சித்தி 59; 4ஆம் தரப் பரீட்சையில் தோற்றியோர் 66, சித்திபெற்றோர் 66; அ பிரிவு சித்தி 53.

வடமாகாண ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட 8 ஆம் தரப் பரீட்சையில் தோற்றியோர் 82, சித்திபெற்றோர் 61; முதற்பிரிவு 21.

திறமைச் சான்றிதழ்கள் : செல்வி ஞானவதி சேவற்கொடியோன்; செல்வி செல்வசாந்தா செல்வரத்தினம் ஆகியோ ருக்கு அளிக்கப்பட்டன.

பொ. தராதர பரீட்சை டிசெம்பர் 1972

தோற்றியோர் 274; ஆறுபாடங்க ளுக்குமேல் சித்திபெற்றோர் 77. உயர் கல்வி பெற தராதரம் பெற்றோர் விஞ் ஞானம் 16; கலை 19;

உயர் தராதரப் பரீட்சை ஏப்றில் 1972

விஞ்ஞான பாடங்களுக்கு தோற்றி யோர் 33. நான்கு பாடங்களில் சித்தி 6. கலை பாடங்களுக்குத் தோற்றியோர் 11; நான்குபாடங்களில் சித்தி 6. சர்வகலா சாலைப் பிரவேசம் விஞ்ஞானம் 1; கலை 4;

புற கிரியைகள் :

கல்வி தவிர்ந்த புறகிரியைகளிலும் போதிய கவனம் இவ்வருடம் செலுத்தி யுள்ளோம்;

விளையாட்டு :

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப் பட்ட 15 வயதுக்குட்பட்டவர் விளையாட் டுப் போட்டியில் எமது பாடசாலை மாண விகள் வெற்றியீட்டினர்; மாத்தறையில் நடைபெற்ற அகில இலங்கை விளையாட் டுப் போட்டியிலும் எமது மாணவர் பங்கு பற்றினர். 14 வயதுக்குட்பட்ட யாழ்ப் பாண மாவட்ட விளையாட்டுப் போட்டி யிலும், அகில இலங்கைப் போட்டியிலும் எமது மாணவிகள் பங்குபற்றினர்; எமது மாணவிகளைத் திறம்படப் பழக்குவதற்கு உதவிய விளையாட்டுத்துறை உத்தியோ கஸ்தர் திரு; ஏகாம்பரம் அவர்களுக்கு எமது நன்றி;

17-க்கும், 19-க்கும் உட்பட்ட மாண வரின் உடற்பயிற்சிப் போட்டியில் எமது மாணவிகள் வட்டார வீராங்கனைகளாகத் தெரிவு தேறினர். திறமையாய்ச் செய்தமைக்கு அளிக்கப்பட்ட வெற்றிக் கிண்ணமும் எமக்கே கிடைத்தது;

எமது கனிஷ்ட வலைப்பந்தாட்டக் கோஷ்டியினர் வட்டாரத்தில் வெற்றி பெற்று, 1972-ல் அநுராதபுரத்தில் நடை

பெற்ற அகில இலங்கைப் போட்டியிலும் பங்குபற்றினர்; "பட்மின்டன்" விளையாட்டு சிறிது காலத்திற்கு முன்பே எமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்ட போதிலும் காலியில் நடைபெற்ற அகில இலங்கைப் போட்டியில் பங்குபெற எமது மாணவிகள் மூவர் தெரிவு செய்யப்பட்டது பெருமைக் குரியதாகும்; எமது கனிஷ்ட பிரிவினரும் 1973 பெப்ருவரியில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றினர்.

சங்கீதம்:

வடமராட்சி ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் எமது சிரேஷ்ட பிரிவினர் முதலிடத்தையும், கனிஷ்ட பிரிவினர் மூன்றும் இடத்தையும் பெற்றனர்; தனிப்பாடற் போட்டியில் செல்வி; திருமறைச் செல்வி துரை ரத்தினம் முதலிடத்தையும், செல்வி; வசந்தி கந்தப்பிள்ளை மூன்றும் இடத்தையும் பெற்றனர். சிரேஷ்ட பிரிவில் செல்வி. பிரேமஜயந்தி இராஜரத்தினம் முதலாம் இடத்தைப் பெற்றார்; வடமாகாண ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் பிரேமஜயந்தி மூன்றும் இடத்தைப் பெற்றார்.

மேலைட்டுச் சங்கீதத்திலும் எமது மாணவிகள் ஊக்கம் காட்டி வருகின்றனர்; எமது பாடசாலை வாத்தியக் கோஷ்டியினர் போதிய திறமையோடு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருகின்றனர்; ஒரு முறை இக்கோஷ்டியினது நிகழ்ச்சியின் தரம்பற்றி, வடமாகாண அதிபர் திரு; அமரசேகரா புகழ்ந்துள்ளார்.

நடனம்

இத்துறையிலும் எமது மாணவிகள் போதிய திறமைகாட்டி வருகின்றனர்; கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் எமது கோலாட்ட நிகழ்ச்சி முதலிடத்தைப் பெற்றது. சேகரப் போட்டியில் எமது முதலாம்வகுப்புச் சிறுமிகள் முதலிடத்தைப் பெற்றனர்; இன்று நடாத்தப்படும் கலை நிகழ்ச்சியில் இது இடம் பெறுகிறது;

சமய நிகழ்ச்சிகள்

இந்து, கிறிஸ்தவ மாணவர் சங்கங்கள் இரண்டும் இவ்வருடத்தில் அதிக உற்சாகம் காட்டி உயரிய நிகழ்ச்சிகளை ஆக்கியிருக்கின்றன; விவேகானந்தசபையால் நடாத்தப்படும் பரீட்சைக்கு மாணவிகள் பலரை எமது இந்து மாணவர் சங்கம் அனுப்பியது. அதிலே எமது பாடசாலை தர அடிப்படையில் இரண்டாம் இடத்தைப் பெற்றது; நவராத்திரி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அழகான கலைமகள் விழா அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவ மாணவ சங்கத்தினரும் கிறிஸ்மஸ், ஈஸ்டர் பண்டிகை முதலியவற்றை வெகு சிறப்பாகவும், பக்தியாகவும் ஒழுங்கு செய்து கொண்டாடினர்; யாழ்ப்பாண கிறிஸ்தவ பாடகர் விழாவிலும் எமது பாடகர் பங்குபற்றினர்.

றேஞ்சர்ஸ், சாரணிகள், சிறு தோழர்

செல்வி அருள்நந்தி அவர்களது தலைமையில் இவ்வியக்கங்கள் மிகத் திறமையாக நிர்வகிக்கப்பட்டன; எமது மாணவிகள் பல இயக்கங்களிலும் பயிற்சிக் கழகங்களிலும் பங்குபற்றினர்; சாரணிகளான செல்வி ராஜினி இராசையா, செல்வி வதனகுமாரி அருள் வீரசிங்கம் ஆகிய இருவரும் இவ்வருடம் தேசாதிபதியின் சாரண பதக்கம் பெற்றுள்ளனர் என்பதை இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்; வடமாகாணத்திலிருந்து மூவர் மாத்திரமே தேசாதிபதியின் சாரண பதக்கம் பெற்றவர் என அறிகிறேன். அம் மூவரும் எமது பாடசாலை மாணவிகளே என அறிவதில் மிகப் பெருமிதம் அடைகிறேன். இன்னும் பல மாணவிகள் இவ்வியக்கங்களில் சேர விரும்புவதால், சாரணர் சிறுதோழருக்கான இரண்டாவது குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன;

கட்டிடங்கள்

புதிய கல்வித் திட்டத்தின் பிரகாரம், இவ்வட்டாரத்தில் முதலாந்தர வகுப்புகளை நடாத்தும் முன்னோடிப் பாடசாலையொன்றாக எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது; ஆகவே எமது வகுப்பறைகள் அதற்கேற்ற முறையில் திருத்தியமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. பெற்றோர் உதவிய ஓரளவு பணத்தைக் கொண்டு நாற்பது பிள்ளைகள் படிக்கக் கூடிய ஓர் அறையை புதுமுறைக்கேற்றதாக நாங்கள் திருத்தி அமைத்துள்ளோம்; வேறோர் அறையையும் அவ்வாறு அமைத்தால் எண்பது மாணவர்களும் புதுமுறையில் கல்வி கற்கக்கூடியதாக விருக்கும்; அதை அமைப்பதற்கு உதவுமாறு பெற்றோராகிய உங்களை இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகிறேன்;

சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட மண்டபவேலை, கட்டிடப்பொருட்கள் கிடையாமையாலும், வேறு பல தவிர்க்க முடியாத காரணங்களாலும் இன்னமும் முடிவுறுதிருக்கிறது; இவ்வருடத்தில் இது முடிவுறும் என எதிர்பார்க்கிறோம்.

நன்றி

எமது பெற்றோர் ஆசிரிய சங்கம், பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிவருகிறது. வாய்ப்பாட்டு, வாத்திய இசை, நடனம் முதலியவற்றில் பிரத்தியேக வகுப்புகளை நடாத்தும் பொறுப்பை இச்சங்கம் கவனித்து வருகிறது; செல்வி விஸ்வலிங்கம், திருமதி நாகராஜா, திருமதி ஆழ்வாப்பிள்ளை என்போர் இவ்வகுப்புகட்குப் பொறுப்பாயிருக்கின்றனர். இச்சங்க உறுப்பினருக்கும் விசேடமாக இதன் நிர்வாகக் குழுவினருக்கும், அவரது அயராத ஆதரவுக்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

பாடசாலை நிர்வாகத்தைத் திறம்பட நடாத்துவதற்கு என்னுடன் ஒத்துழைக்கும் எனது சக ஆசிரியர்களுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் என் நன்றி!

ANNUAL PRIZE-GIVING

20TH MAY 1974

PROGRAMME

Welcome

College Song

Principal's Report

President's Address:
T. Manicavasagar Esqr.
(Director of Education, Northern Region)

Prize Day Address :
Rev. Father X. S. Thani Nayagam

Special Address
and
Prize Distribution :
Mrs. R. R. Navaratnam
(Rtd. Director of Education, Northern Region)

Vote of Thanks :
Proposed by: **Miss Manonmany Murugesu**
(Head Prefect)
Seconded by: **K. Navaratnam Esqr.** — Parent
(Principal, Athiar Hindu College, Neerveli)

Entertainment :

1. Action Song (English) .. Primary School
2. Chembu Dance .. Prize winning item Thinakaran Festival 1973
3. Group Song (Tamil) .. Middle School
4. Dance Drama .. உரைசால் பத்தினி Upper School

National Anthem

அதிபர் அறிக்கை

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! வணக்கத்திற்குரிய பிதா தனிநாயம் அடிகளே! திருமதி நவரத்தினம் அவர்களே! பெற்றோர்களே! பெரியோர்களே!

எமது வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு உங்கள் அனைவரையும் மிகவும் மகிழ்ச்சியுடனும், பணிவுடனும் வரவேற்கின்றேன்; முந்திய ஆண்டுகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது, இம்முறை என்னுள் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றி மறைகின்றன: அறிவுக் கடல்கடந்த கல்விமான்களாகிய மும்மணிகளோ இன்று இந்த மேடையில் ஒருங்கே பார்க்கும்போது சிறிது பயம் தோன்றுகிறது: எம்முன் வீற்றிருக்கும் பெற்றோர், பெரியோர், பழைய மாணவிகளைப் பார்க்கும்போது சந்தோஷமும் உற்சாகமும் ஒருங்கே எழுகின்றன. எமதுநாட்டின் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் தற்போது எல்லோர் மனதையும் உறுத்துகின்றன. ஈழத்தின் வருவாயின் பெரும் பகுதியை விழுங்கிக் கொண்டிருக்கும் கல்வி வளர்ச்சிகூட, புதிய பிரச்சினைகளால் இடர் உறுகிறது. மாணவ மாணவிகளிடத்தில் காணப்படும் அமைதியின்மை அச்சமூட்டுகின்றது. இத்தகைய சூழ்நிலையிலே பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள் வழமைபோல் மாணவரது உற்சாகத்தையோ, பெற்றோரது திருப்தியையோ பூரணமாகப் பிரதிபலிக்கின்றன என்று கூறமுடியாது;

ஆண்டு அறிக்கை

இவ்வாண்டு அறிக்கையை மிகவும் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்;

மாணவர் :

மாணவர் தொகை: 1974-ம் ஆண்டு மே மாதத்தில் எமது மாணவர் தொகை 1442; கனிஷ்டபிரிவு 652; சிரேஷ்டபிரிவு 790.

ஆசிரியர் :

பட்டதாரி ஆசிரியர்கள் 16. (பயிற்றப்பட்ட பட்டதாரிகள் 4) பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 23. விசேட பயிற்சிபெற்றோர் 4. ஏனையோர் 3: வசதிக் கட்டணப்பணத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 5.

அறிக்கை தரப்படும் கால எல்லைக்குள் பின்வரும் ஆசிரியர்களின் சேவையை நாம் இழக்க நேரிட்டது. இவ்வருடம் தைமாதத்தில் திருமதி அரியநாயகமும், செல்வி முத்துச்சாமியும் கல்வித் திணைக்களத்தின் மாற்றக் கொள்கைக் குட்பட்டு இடமாற்றம் பெற்றனர்; செல்வி முத்துச்சாமி நான்கு வருடங்கள் அமைதியான முறையில் பொறுப்புணர்ச்சியுடன் மிகவும் திறமையாகக் கடமையாற்றி யுள்ளார். அவருடைய சிறந்த சேவையைப் பாராட்டுகின்றேன்; திருமதி அரியநாயகம் எமது கனிஷ்ட பிரிவில் ஒன்பது வருடங்கள் சேவை செய்துள்ளார். இவர் ஆற்றிய சேவை மெச்சத்தக்கது. வகுப்பறையில் மட்டுமன்றி கலாச்சார விளையாட்டுத் துறைகளிலும் ஆர்வம் காட்டினர். கடைசியாக அவர் தயாரித்த 'இராவணேசன்' என்ற நாடகம் மாணவிகளிடையே அவர் வளர்த்திருந்த நடிப்புத் திறனுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்தது. திரு. வேலாயுதம்பிள்ளை சங்கீத ஆசிரியராக எம்மத்தியில் இரு வருடங்களாகக் கடமையாற்றிப் பின் தம் வசதிக்கேற்ப தை மாதம் மாற்றம் பெற்றார். செல்வி பா. வேலுப்பிள்ளை 1974 மாசி மாதம் பத்துவருட சேவையின்பின் மாற்றப்பட்டார். தமிழையும் சைவசமயத்தையும் திறம்படக் கற்பித்தார்; அவர் விடுதிச்சாலை ஆசிரியராகவும் சிலகாலம் ஊக்கத்துடன் உழைத்துள்ளார். செல்வி துரைராசா அவர்கள் 1974 மாசி மாதம் எம்மைவிட்டு விலகினர். இவர் மூன்று வருடங்களாக மேலை நாட்டுச் சங்கீதம், வாத்தியம் என்பவற்றைக் கற்பிப்பதில் ஆர்வம்காட்டி உழைத்தார்; வாத்தியக் கோஷ்டியைத் தொடக்கிவைத்து,

பாடசாலையிலும், வெளியேயும் பங்குபற்ற முழுமனதுடன் ஒத்துழைத்தார். இவர் விலகியது எமது பாடசாலைக்கு ஒரு பேரிழப்பாகும். திருமதி குமாரசாமி அவர்கள் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்காக 1974 சித்திரை மாதம் பதினெருவருட சேவையின் பின் விலகினர். உடற்பயிற்சி ஆசிரியராக் கடமையாற்றிய இவரின் சேவை குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத் துறையில் மாகாண அடிப்படையில் மட்டுமன்றி, அகில இலங்கைப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டச் செய்தார். எமது கல்லூரி கடந்த பல ஆண்டுகளாக, விளையாட்டுத்துறையில் ஈட்டிய வெற்றிகள் இவரின் சேவைத் திறனுக்குச் சான்று பகர்கின்றன. இவர் இங்கில்லாமையைப் பெரிதும் உணர்கின்றோம். ஆசிரிய பயிற்சியில் அவர் வெற்றிபெற வாழ்த்தி, மீண்டும் எமது கல்லூரிக்குச் சேவைசெய்ய அனுப்பி வைக்கப்படுவார் என்றும் நம்புகிறோம். எம்மை விட்டு விலகிய ஆசிரியர் ஒவ்வொருவரினதும் சேவைக்கும் ஒத்துழைப்புக்கும் எனது மனமார்ந்த நன்றி.

பின்வரும் ஆசிரியரின் சேவை எமக்குக் கிடைத்துள்ளது: திருமதி S. இரத்தினராசா, செல்வி E. நல்லதம்பி — விஞ்ஞானப் பட்டதாரிகள்: திரு. V. பரமசாமி — சங்கீத ஆசிரியர். செல்வி P. வேலாயுதம், செல்வி M. சிவப்பிரகாசம், திருமதி R. A. இராசசிங்கம் — பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். செல்வி M. அருள்நந்தி இவ்வருடத் தொடக்கத்தில் எமக்குத் திரும்ப அனுப்பப்பட்டுள்ளார். திரு. V. சிவானந்தநாயகம் B. Sc., செல்வி N. கணபதிப்பிள்ளை B. Sc., செல்வி T. இராமலிங்கம் B. A. — உயர்தர வகுப்புகளில் கற்பிப்பதற்கு வசதிக்கட்டணப் பணத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்வுடன் எமது மத்தியிலிருந்து சேவைபுரியுமாறு விரும்புகிறேன்.

பரீட்சைப் பெறுபேறுகள்

(a) 1973-ல் அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கம் நடாத்திய 3-ம் தரப் பரீட்சைக்கு தோற்றியவர் 70; சித்திபெற்றோர் 67; A ப் பிரிவு 52. B ப் பிரிவு 14. C ப் பிரிவு 1; 4-ம் தரப்பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 70. சித்திபெற்றோர் 69; A ப் பிரிவு 46. B ப் பிரிவு 20; C ப் பிரிவு 3:

1972-ம் ஆண்டில் 4-ம் தரப் பரீட்சையில் விசேட பரிசில் அமிர்தவல்லி கணேசமூர்த்திக்கு 1974-ம் ஆண்டின் முற்பகுதியில் அளிக்கப்பட்டது.

(b) 1973-ல் வடமாகாண ஆசிரிய சங்கத்தினரால் நடாத்தப்பட்ட 5-ம் தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 72; சித்திபெற்றோர் 72; A ப் பிரிவு 17; B ப் பிரிவு 43. சாதாரணம் 12. 8-ம் தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 84. சித்திபெற்றோர் 54. A ப் பிரிவு 5. சாதாரணம் 49.

சென்றவருடம் எமது 8-ம் வகுப்புப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தி பற்றதாய் அமைந்துவிட்டன. இவ்வருடம் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கின்றோம்;

(c) பொதுத் தராதரப் பரீட்சை 1973 (G. C. E. O/L) கலை: தோற்றியவர்கள் 129. 6 பாடங்களிலும் கூடுதலாகவும் சித்திபெற்றோர் 52. உயர்தர வகுப்பிற்குத் தகுதிபெற்றோர் 34; விஞ்ஞானம்: தோற்றியோர் 143; 6 பாடங்களிலும் கூடுதலாகவும் சித்திபெற்றோர் 81, உயர்தர வகுப்பிற்குத் தகுதிபெற்றோர் 42;

(d) உயர்தரப் பரீட்சை 1973 (G.C.E.AL/) கலை: தோற்றியோர் 26. 4 பாடங்களில் சித்திபெற்றோர் 15; 3 பாடங்களில் சித்திபெற்றோர் 7; விஞ்ஞானம்: தோற்றியோர் 31; 4 பாடங்களில் சித்திபெற்றோர் 5; 3 பாடங்களில் சித்திபெற்றோர் 6.
பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற்றவர்கள் கலை: 7, பௌதிக விஞ்ஞானம்: 2, மருத்துவப்பிரிவு: 1;

இவ்வருடத்தில் உயர்தர வகுப்பின் பெறுபேறு குறிப்பிடத்தக்கது; இவ்வருடம் எமது பாடசாலைச் சரித்திரத்தில்

முதல்முறையாகப் பல்கலைக்கழக மருத்துவப் பிரிவுக்கு ஒரு மாணவி மலர்விழி கந்தசாமி தெரிவு பெற்றுள்ளார். இது ஏனைய மாணவிகளுக்கு உற்சாக மூட்டுவதோடு பெற்றோருக்கும் எமது பாடசாலையில் நல்நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் நம்புகின்றோம்.

சமயப் பரீட்சைகள்

1. விவேகானந்த சபையினால் நடாத்தப்படும் இந்து சமயப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் தொகை 821. அதில் சித்திபெற்றோர் தொகை 638. இவர்களில் பலர் வகுப்பு அடிப்படையில் விசேஷ பரிசில்களுக்குத் தகுதி பெற்றுள்ளனர். 1973-ல் 9-ம் வகுப்பைச் சேர்ந்த சித்திராதில்லை கனகசபை தங்கப்பதக்கம் பெறுபவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்விபரங்கள் அனைத்தும் பத்திரிகை மூலம் கிடைத்துள்ளன. சபையின் அறிவிப்பு இன்னும் கிட்டவில்லை.

2. மறைக்கல்வி நடுநிலையம் நடத்திய கத்தோலிக்க மதப் பரீட்சைக்கு 30 மாணவிகள் தோற்றினர். 25 மாணவிகள் சித்தியடைந்தனர். விசேட சித்தி பெற்றவர் 6-ம் வகுப்பு றெனி சேவியர், ஜசீந்தா ஆசீர்வாதம், 9-ம் வகுப்பு மரியநாயகி அந்தோனிப்பிள்ளை, மேரி ஜசீந்தா யோசேப்பு.

3. வடமாகாண கிறீஸ்தவ சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பத்தாம் வகுப்புப் பரீட்சையில் கிறீஸ்தவ மாணவிகள் பங்குபற்றினர்.

5-ம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்றோர் 3 மாணவிகள். சுமித்திரை சோமசுந்தரம், யோகேஸ்வரி வேலாயுதம், பத்மராணி சத்திவேலாயுதம்.

வடஇலங்கை சங்கீத சபையால் நடாத்தப்பட்ட பரீட்சை பாடசாலை மூலம் தோற்றியோர் தொகை 21. சித்திபெற்றோர் 20. இதில் 2-ம் வருடப் பரீட்சையில் வசந்தி சுந்தப்பிள்ளையும், 3-ம் வருடப் பரீட்சையில் லீலாரமணி பொன்னுத்துரையும் முதல் பிரிவில் சித்தி பெற்றனர்.

புற முயற்சிகள்

நாட்டின் பொருளாதார உணவு நெருக்கடியினால் எமது வழமையான புற முயற்சிகளிற் சில கைவிடப்பட்டன. கல்வி இலாகாவினால் நடாத்தப்படும் தமிழ்த்தினப் போட்டிகள்; உடற்பயிற்சிப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவில்லை. மற்றும் புற முயற்சிகளிலும் வழமையிலும் குறைவாகவே நேரத்தைச் செலவிட நேர்ந்தது.

A. விளையாட்டு

யாழ்ப்பாணப் பெண்கள் பாடசாலை விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியிலும், வலைபந்தாட்டப் போட்டியிலும் எமது மாணவிகள் பங்குபற்றினர். விளையாட்டுப் போட்டியில் எமது மாணவிகள் போதிய வெற்றி ஈட்டவில்லை. வலைப்பந்தாட்டப் போட்டியில் சிரேஷ்ட பிரிவினர் மாவட்ட வீராங்கனைகளாக இடம்பெற்று அகில இலங்கைப் போட்டியிலும் விரைவில் பங்குபெற உள்ளனர். எமது மாணவிகளில் சிலர் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் (Eastern Zone Meet) விளையாட்டுப் போட்டியில் பங்குபெறத் தகுதி பெற்றுள்ளனர்.

B. கலை நிகழ்ச்சிகள்

1. புதிய முறைப்படி கல்வி பயிலும் முதலாந்தர மாணவரின் பொருட்காட்சியும் கலை நிகழ்ச்சியும் 1973-ம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்றன. இம் மாணவரின் பெற்றோர் யாவரும் வருகை தந்து தமது சிறாரின் ஆக்க முயற்சிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களித்துச் சிறுவரை உற்சாகப்படுத்தினர்.

2. 1973-ல் நடாத்தப்பட்ட தினகரன் விழாவில் எமது நிகழ்ச்சி (செம்பு நடனம்) முதலாம் இடத்தைப் பெற்றது. இன்று நடக்கவிருக்கும் கலைநிகழ்ச்சிகளில் இந்நடனம் இடம்பெறுகின்றது.

3. கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சங்கீத நடனப் போட்டியில் எமது நாட்டிய நாடகமான "பாஞ்சாலி

சபதம்" மாவட்டப் போட்டியிலும், அனுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரை இறுதிப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றது. இதன் இறுதிப் போட்டி நடைபெறவில்லை.

4. வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்தும் சங்கீத, பேச்சுப் போட்டிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை; சென்ற வருடம் போல் இவ்வாண்டிலும் எமது மாணவிகள் திறமையாகச் செய்வார்கள் என்றே எதிர்பார்க்கின்றோம்.

C. சமய நடவடிக்கைகள்

சமயப்பணிகள் யாவும், ஆசிரியர்களும் மாணவர்களும் கொண்ட செயற்குழு வழிகாட்ட சமய சங்கங்களினூல் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சமய வழிபாட்டுடனும் தொடர்பான விசேட தினங்கள் கொண்டாடப்பட்டன.

இந்து மாணவர் சங்கம் வழமைபோல் குரு பூசைகளையும், நவராத்திரி விழா ஒன்பது நாட்களையும் கொண்டாடியது. விடுதிச்சாலை இந்து மாணவிகள் எமது பாடசாலைக்கு அருகில் உள்ள விநாயகர் ஆலயத்திற்கு வெள்ளி மாலைப் பூசைக்கு மூன்று பஜனைசெய்யும் வழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்கள்.

கிறீஸ்தவ மாணவ சங்கம் கிறிஸ்மஸ், ஈஸ்டர் பண்டிகையை விசேட முறையில் கொண்டாடியது; யாழ்ப்பாண கிறீஸ்தவ பாடகர் விழாவிலும் எமது பாடகர் பங்கு பற்றினர். வெள்ளிக்கிழமைகளில் காலை வழிபாட்டை காட்லிக் கல்லூரி கிறீஸ்தவ மாணவருடன் ஒருமித்து ஆலயத்தில் நடத்தும் வழமை அண்மையில் நிறுத்தப்பட்டுள்ளது.

சாரண இயக்கம்

எமது பாடசாலையில் இவ்வியக்கம் வளர்ந்து கொண்டே வருகிறது. சாரண இயக்கத்தின் மாவட்ட ஆணையாளரான செல்வி. அருள்நந்தியின் சேவை திரும்பவும் எமது பாடசாலைக்குக் கிடைத்தது இவ்வியக்கத்திற்குக் கூடிய உற்சாகத்தை அளிக்கின்றது. சிறுதோழர் குழு இவ்வருடத் தொடக்கத்தில் அச்சுவேலியில் பாசறை (Pack Holiday) அமைத்தது. சாரணிகளுக்குப் பொறுப்பான ஆசிரியைகள் இருவர் அனுமதிப்பத்திரம் பெறுதற்கான அகில இலங்கைப் பாசறையிலும் (All island Guiders Licence) ஒருவர் இலங்கை சாரணிய பயிற்சி மகாநாட்டிலும், சென்ற விடுமுறை நாட்களில் பங்கு பற்றினர். இம்மாதம் பருத்தித்துறையில் கண்டிப் பிரதேச றேஞ்சேர்ஸ் நடத்திய பாசறையில் எமது றேஞ்சேர்ஸ் இருவர் சேர்ந்து கொண்டனர்; எமது சிறு தோழர் குழுவுக்குப் பல வருடங்களாகப் பொறுப்பு வகிக்கும் திருமதி. அரியரத்தினம் சாரண இயக்கத்தின் மாவட்ட ஆணையாளராக இவ்வருடம் நியமனம் பெற்றுள்ளார்; தற்போது எமது ஆசிரியர் குழுவில் இரு ஆணையாளர் உளர் என்பது பெருமைக்குரியது.

பிரத்தியேக இசை நடன வகுப்புகள்

பெற்றோர் ஆசிரிய சங்கத்தினரால் நடத்தப்படும் பிரத்தியேக இசை நடன வகுப்புகள் மிகவும் துரிதமாக வளர்ந்து கொண்டு வருகின்றன. இவ் வகுப்புகளில் உள்ள மாணவரின் தொகை பின்வருமாறு :

சங்கீதம் 63, நடனம் 93, வயலின் 20. இவ்வகுப்பு மூலம் வட இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்பட்ட பரீட்சைக்கு மாணவிகள் தோற்றியுள்ளனர். இதன் பெறுபேறுகள் அறிக்கையில் முன் கூறப்பட்டன.

இச்சங்க உபதலைவருள் ஒருவரும், பருத்தித்துறை நகரசபைத் தலைவருமான திரு. N. நடராசா அவர்களின் தலைமையில் இவ்வகுப்பு மாணவிகளால் சென்ற மாசி மாதம் கலைவிழா நடாத்தப்பட்டது; இங்கு பயிலும் 181 மாணவிகளும் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. பெற்றோர் அன்பர்களின் சமூகம் மாணவிகளுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

PRIZE-GIVING 1974



The Chief Guest

Delivers

The Prize-Day Address

Distribution

of

Prizes



ENTERTAINMENT

The Ballet — உரைசால் பத்தினி



Action Song — English

The Late Mrs. W. N. S. Samuel

AN APPRECIATION

She still lives so vividly in our thoughts, that it could well be yesterday we shared delightful hours of laughter with her. Would that all those yesterdays were tomorrows with each morning bringing the warm smile and the impish twinkle in the eye of this lovable personality.

Full of fun and a ready sense of humour, she would pass us on our way to class each morning with a witty comment or a humorous aside leaving us to walk into class with a smile.

A successful teacher of Zoology in the Advanced Level Classes, her pupils never failed to speak glowingly of the conscientious work and painstaking care she took of every one of them. In her dissections she insisted on perfection of technique. Her attention to minute details was something which every student who learnt under her appreciated. She kept in touch with current methods and the latest developments in the teaching of her subject. She always made sure that the information she gave was accurate and up to date, It is not surprising therefore that her Advanced Level results are to be commended. The excursions on which she took her pupils to the up-country were memorable experiences to them.

In the sphere of English too the school feels her loss very deeply. Gone with her to realms beyond recall are the interest and pleasure she took in the teaching of English, her excellent coaching of girls for elocution, the vivacity of her acting in Staff Items, in school and the success of the plays she produced. Learning dramatics under her was a rich experience for her students for she made even the minor characters in her play assume such magnitude that every girl taking part felt herself personally responsible for the success of the play. Her choice of a play for her last production was by some strange chance ' the Dear Departed '.

Her many faceted personality made her the natural choice for a variety of offices — Staff Secretary, Treasurer and later President of the Staff Guild, V. T. A. Representative and Staff Adviser to the Advanced Level Union. It was entirely due to her pioneering efforts in this last capacity that the Advanced Level Union Social, long desired by the students made its successful debut last year. As a qualified Teacher Counsellor she was helpful confidant to pupils.

All her endeavours showed evidence of her foresight skill and planning. So much so, that when she was President of the Staff Guild, the attendance at meetings used to be unusually high, not only because the meetings were bound to be interesting but also because the tea which followed was sure to be more so.

With her love and flair for cookery, she organised with deceptive ease teas and dinners with novel items and embellishments for the school and often prepared special dishes for functions at Hartley College on behalf of her husband.

She was of immense help to her husband with his many other duties too. As wife of the Church Steward she helped him to organise Methodist Day, Easter, Christmas and other Church celebrations. She was in short a devoted wife and her love for her children knew no bounds. She was passionately fond of music and created in her children an interest for it. She took pleasure in entertaining friends and relations, and her home with its usual quota of four boys—was, during the holidays often full of more boys and girls, compensating may be, for her longing for a girl of her own.

Deeply religious she rendered valuable service to the Church as a Sunday School teacher and President of the Y. W. C. A. and the M. W. Y., organising Film Shows Cookery demonstrations and Carol Services. She would ensure a good attendance at these meetings by going personally to the members' houses to invite them and if the meetings ended late invariably seeing to it that they returned home safe—escorted by her husband. The services she used to take at morning prayers were always inspiring.

She had an extremely sympathetic heart, sensitive to suffering and poverty. Hers was a helping hand, helping persons in distress, helping colleagues with their wedding preparations, helping a sick friend with a cheering visit and the thoughtful gift of some delicious invalid dish, helping neighbours in moments of domestic crisis—helping wherever help was needed.

She had a well informed mind, listened regularly to the news over the radio, rarely missed a good English film and kept herself abreast of current affairs. We miss her morning greetings spiced with interesting snippets of news.

She had a continuous, bubbling spring of enthusiasm and gave generously of her thought, time and energy to make each commitment a success. She also had the rare capacity to immerse herself completely in whatever she undertook. Just to listen to her description of one of the recipes in her extensive repertoire ; because of the enthusiasm she infused into the sharing of it, was an experience that cannot be forgotten. If it was play she was producing, she would think, live and talk of nothing but the play till it was staged. If she found a book particularly enthralling she would share her pleasure in it, with those around her. At every available moment she would involve us completely in the characters, incidents and interesting aspects of the book and if it happened to have a sad ending she would say, 'I wish the author had given it a different ending'. And now how we wish the author of her life had not written the last chapter so soon....

Too soon it seems to us, for her gentleness of spirit and complete involvement with life had endeared her to all who knew her. Shy by nature, she never claimed any right or privileges but always put the needs and claims of others before hers. The purity and guilessness of her heart were reflected in her face. Her influence was pervasive like the fragrance of a flower—never forced on others but natural and beneficial. To have known her, was to have learnt from her. May our endeavours enriched by our association with her bear testimony to the ideals by which she lived.

MISS M. ARULNANDHY

In Silence.....

We remember

THE LATE MRS. INPAMANIE SAMUEL

Died : **15-4-1973**

Aged : **44**

அஞ்சலி செலுத்துகிறோம்

ஆயிரத்துத் தெள்ளாயிரத்து எழுபத்திமூன்று
ஆண்டதனில் ஏப்ரல் பதினைந்தாம்நாள்
மாதுயரம் எம்மவரின் குழாத்தினிலே சூழ
மாதுநல்லாள் திருமதி சாமுவேல் அவர்கள்
நோயினது பிடியினின்று மீளமுடியாமல்
நொந்த உள்ளம் பலஏங்க இவ்வுலகைவிட்டுப்
போயினரே அவருடைய பிரிவுதரு துயரம்
பொங்கிடவே மனத்தினிலே அவர்தம்மை நினைப்போம்

●

குடையொன்றை விரித்தபடி ஒருகையில் பிடித்து
கூடையொன்றை மறுகையில் தாங்கியே அன்ன
நடைபயின்று காலையிலே பள்ளிவரும் தோற்றம்
நம்முன்னே எழுந்திடுமே அவர்தம்மை நினைத்தால்
மடைதிறந்த வெள்ளம்போல் மாணவர்க்குப் பாடம்
மகிழ்வோடு விளக்கிநிற்கும் கோலத்தை எண்ணின்
திடமான மனமெனினும் நெகிழ்ந்திடுமே ஒருகால்
சென்றுரே எமைவிட்டு என்பதனை மறப்போம்.

●

S. T. சாமுவேல் எனும் பெரிய ஆசான்
பெற்றெடுத்த அருமைமகள் இன்பமணியாவார்
கஷ்டங்கள் எதுவுமே காணுமல் வாழ்ந்தார்
கல்வியிலே முன்னேறிப் பட்டதாரியானார்.
இஷ்டம்போல் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்.
இளமையிலே எழில்பொங்கப் பொலிவுற்றுநின்ற
புஷ்பமாம் 'இன்பத்தை' தன் வாழ்க்கைத் துணையாய்
W. N. S. சாமுவேல் நற்குணவான் பெற்றார்.

ஹாட்லிக்கல்லூரி தன்னிலே கணவன்
கற்பித்தார் அதனிலே இவர் எமதுபள்ளிக்கு
மாற்றத்தைப் பெற்றார் மகிழ்வோடு வந்தார்
மனதினிலே கவலையென்பதறியாது வாழ்ந்தார்
வீட்டினிலே மாமிக்குச் செல்வ மகளானார்
விரும்பிய நற்கணவனுக்கு அருந்துணைவியானார்
காட்டிடுவார் பிள்ளைகளில் பேரன்பு என்றும்
களிப்போடு இருப்பதுவும் கடவுள் வழியென்பார்.

●

பள்ளியிலே உயர்தர வகுப்புக்கு விலங்கியல்
பாடமது கற்பிப்பார். ஆங்கிலம் உயிரியல்
கல்வித்தராதரப் பொதுவகுப்பு மாணவர்க்கு
கற்பிப்பார் தெளிவாக, ஐயங்கள் இன்றியே
சொல்லித் தருவதற்காய் பாடங்கள் தம்மை
சோம்பலின்றி நன்முக ஆயத்தம் செய்வார்.
எல்லா வழியிலும் செம்மையாய்க் கல்வியை
எடுத்தியம்ப உழைப்பதுவே தம்நோக்கம் என்பார்.

●

விலங்கியல் பாடத்தில் உள்ள செய்முறைகள்
விளக்குகின்ற வேளையிலே யவர்தம்மை மறப்பார்
கலந்தோடும் நரம்புகளை நாடிகளை இன்னும்
கண்ணுக்குப் புலனுகா நுண்ணுறுப்பை யெல்லாம்
துலாம்பரமாய் மாணவர்க்குக் காட்டியதில் ஆர்வம்
தூண்டிநிற்பார். அதனோடு சமையலெனுங் கலையில்
பலரகமாம் உண்டிகளை ருசிமிகவே செய்யும்
பக்குவத்தை மற்றவர்க்குச் சொல்லி மகிழ்ந்திடுவார்.

●

மனத்தினிலே களங்கம் என்ப சிறிதளவும் இல்லை
மற்றவரும் தமைப்போலென நம்பிவிடும் கொள்கை
சினத்தினை நாம் அவர்முகத்தில் கண்டுகொண்டதில்லை
சிக்கல்கள் வந்தாலும் சிரித்தபடி தீர்ப்பார்.
இனத்தவர், அல்லாதார் என்ற பேதங்காணார்.
இயலுமட்டும் எவருக்கும் உதவ முன்வருவார்
கனத்தவர்கள் இளைத்தவர்கள் எவரையுமே ஒன்றுபோல்
கணித்திடுவார் அவர்குணமும் வியப்பதற்கு ஒன்றே.

கடந்தசில ஆண்டுகளாய் நோய்தனுக்கு ஆளாய்
கஷ்டமுற்றார். நீர்த்திடவே பலமருந்து வகைகள்
உடனுடனே எடுத்துவந்தார். சிறிதுகுணம் பெற்றால்
உளம் மகிழ்வார். உற்சாகம் பழையபடி பெறுவார்
உடனலமும் அடிக்கடியே பாதித்த போதும்
உள்ளமது சோர்வடைய விட்டதில்லை யென்றும்
கடமைகளைப் பேணுவதில் தன்கருத்தை முற்றுமுடிக்
கவனித்தார். உடல்வருத்தம் அதனாலே மறந்தார்

●

இறுதிவரை தன் கடமை பூரணமாக்கி
இறைவனது கரத்திலே அடைக்கலமான
அருங்குணங்கள் நிறைந்தவருக்கு மௌனமாக
அஞ்சலி செலுத்திடுவோம் சிலநிமிஷம்
திருமதி சாமுவேல் அவர்கள் இப்போ
சென்றுவிட்டார் எம்மைவிட்டு. ஆனாலவர்
அரும்பணிகள் எம்மிடையே தொடரவேண்டும்
ஆத்மா சாந்திபெற வணங்க வேண்டும்.

திருமதி ஆறுமுகம்,
ஆசிரியை.

நீங்காத நினைவுகள்

ஆழ்கடலில் அலை முட்டி, முட்டி ஆர்ப் பரிக்கின்றது; கரையைத் தொட்டுத் தொட்டுத் தழுவுகின்றது. நீர்ச் சுழ லொன்றுண்டாகின்றது. சோகிகள், சிப்பி கள், சிறுமீன்கள், தடிகள், தண்டுகள் எல் லாம் சுழன்று சுழன்று செல்கின்றன; என் எண்ணச் சுழலிலும் எத்தனையோ காட்சி கள் நீண்ட படக்காட்சியாக ஓடுகின்றன; கடலைக் கண்டதும் எனது பாடசாலை; "மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை" நினைவில் சுழல்கிறது. அது இனிய நினைவுகள். என் இனிய இவ்வெண்ணச் சுழலிலே தண்மதியில் களங்கமென ஒரு பெருங் கீறல் விழுகின்றது; என் நெஞ் சம் விம்முகின்றது. ஏன் மெதடிஸ்ட் விம் முகின்றது?

சுமாரான உயரத்திலும் சற்றுக் குறு கிய உருவம், சற்றே பருத்த சிவந்த மேனி, காண்போரைக் காந்திபிழக்கும் புன்னகை பூத்த தண்மதி வதனம். இவ் அடையாளங்களே யாரைக் குறிப்பிடுகின் றன என்பதை மெதடிஸ்ட்டில்லுள்ளோர் நிச் சயமாக அறிவர்; ஆம் இவ்வன்பு வடிவிற் குடியவர் அண்மையில் நாம் இழந்த திருமதி சாமுவேல் அவர்களேயாவர். இவர் தம் வாழ்நாட்களின் பெரும் பகுதியை நம் பாடசாலையிலேயே கழித்துள்ளார். தன் இளம் பராயத்தையும் மெதடிஸ்ட்டிலேயே கழித்துள்ளார். 14 வருடங்களாக எமது பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற் றினர். எத்தனையோ அதிகாரத் தோர ணையாலை வார்த்தைகள் பிரயோகித்ததை

யான் ஒருபோதும் காணவில்லை. ஏன் ஒருவருமே கேட்டிருக்க முடியாது; பாடம் போதிக்கும் போதும் அன்பும் அருளும் கூடிய இன்முகங்கொண்டு போதிப்பதில் இன்பம் காண்பவர்; இவருடைய பெயரிலேயே இன்பம் கலந்திருப்பதோ என்னவோ இவர் எந்நேரமும் இன்பமாகவே இருப்பார்;

கணகணவென மணியொலி இசைக்கிறது. நாம் விலங்கியல் பாடத்தினை ஆரம்பிப்பதற்கு இன்முகத்துடன் ஆவலுடன் இருக்கின்றோம். மந்தகாச மதிவதனத்துடன் காலை வணக்கம் கூறியபடியே வகுப்பறையில் பிரவேசிக்கின்றார் எமது விலங்கியல் ஆசிரியையான திருமதி சாமுவேல் அவர்கள். பதில் வணக்கம் செலுத்தியபடியே இருக்கையில் அமர்கின்றோம்; "எப்படி? பிள்ளைகளே!" என்னும் அன்பு விசாரணை நடைபெறுகிறது. "அப்போ சரி பாடம் தொடங்கலாம் தானே." "ஆம்" என்று ஏகோபித்த எமது குரல்கள் ஒலிக்கின்றன; பாடம் தொடங்குகின்றது. ஆங்கிலத்திலேயே கற்று ஆங்கிலத்திலேயே படிப்பித்து வந்தபோதிலும் தமிழ் திக்கித்திணறித்தான் வெளிவருகின்றது; ஆனால் அதற்காக அவர் மனந்தளர்வதில்லை; ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கலைச்சொற்களை நாம், நான்முந்தி நீமுந்தி எனப் போட்டியிட்டுக் கூறுவோம். ஆனால் அவரோ உங்களுக்கு நான் சொல்லித்தரவல்ல என்று கூறுவது போல் எமக்கு முன்னரேயே தாம் கூறவேண்டும் என்று துடிதுடிப்பார். இந்த இன்பமயமான போட்டியினிடையே எமது விலங்கியல் பாடமும் நேரமும் போவதே தெரியாது முடிவடைகின்றது; சில சமயங்களில் வேறுபாடம் படித்துச் சோர்வுடன் காணப்படுவோம். இந்நேரத்தில் இவர் உற்சாகமான வார்த்தைகளால் எம்மைத் தெளிவிப்பார். "பிள்ளைகளே! (இப்படித்தான் இவர் மாணவர்களை விழிப்பது) கல்வியே கருந்தனம்; சோர்வின்றிப் படியுங்கள்; மனித வாழ்க்கையில் எத்தனையோ மேடுபள்ளங்கள் தோன்றும், மறையும். இன்றைய சிறுவர்களாகிய நீங்களும் நாளைய தாய்மார்களேயாகும்; எனவே நீங்களும் இந்த மேடுபள்ளங்களை எதிர் நோக்கத்தான் வேண்டும். இப்போது ஏற்படும் இச்சிறு குழியைக் கண்டு ஏன் சோர்வடைகிறீர்கள்?" இப்படியான இன்னோரன்ன அறிவுரைகள் வழங்குவார். எமது க.பொ.த.(உயர்தரம்) பரீட்சை நெருங்க நெருங்க எம்மை உற்சாகப் படுத்துவதும் எமக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுமாகவே இருந்தார்;

இவருடைய இன்பமயமான வாழ்க்கை கடவுளுக்குப் பொறுக்கவில்லையோ? சிறிதே சுகவீனமுற்றிருந்த திருமதி சாமுவேல் அவர்களை படுமோசமான நிலையில் யாழ்; அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்னும்செய்தி கேட்டோம். மனம் பதைபதைத்தோம். இந்நிலையில் எமது பரீட்சை நாளும் வந்தடுத்தது; எம்மைப் பரீட்சைக்காக ஆயத்தப்படுத்தியவரோ மருத்துவமனையில் படுத்தபடியே நாம் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று இறைவனை இறைஞ்சியதாக இவரது சிநேகிதியும் சக ஆசிரியருமான திருமதி. புவனசுந்தரம் அவர்கள் எமக்குக் கூறினார். நான் மருத்துவமனைக்குச் சென்றபோது முதலில் எம்மைப்பற்றிய, எமது பரீட்சையைப்பற்றிய விசாரிப்புகளையே எழுப்பினார். மாணவர்களைத் தாயன்போடு நேசிக்கின்றார் என்பதற்கு வேறென்ன சான்றுகள் தேவை? இவருக்குப் பெண் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை; தனக்குப் பெண்குழந்தை இல்லாத குறையை நீக்கவே கருணாமூர்த்தியாகிய இறைவன் பெண்பிள்ளைகளுடன் பழகும் வாய்ப்பை அழித்துள்ளான் என அடிக்கடி கூறுவார். மாதங்கள் உருண்டோடின; சற்றுச் சுகம்பெற்றார். வீட்டிலிருக்க மனம் ஒப்பாது பாடசாலைக்கு ஓடோடி வந்தார்; ஆனால் அவரது ஆசை நிலைக்கவில்லை. திரும்பவும் கடும் சுகவீனம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்;

திடீரென ஒருநாள் ஒருசெய்தி வந்தது. சாதாரணமான செய்தியல்ல அது; காதுகளில் நாராசம் வார்த்தது போன்றவொரு செய்தி! நம்பமுடியவில்லை!! ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும்; இதோ நாம் பாடசாலை உடையில் அணிவகுத்து

அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக நின்று பார்க்கின்றோமே !!! அது என்ன? பூதவுடல்.. திருமதி சாமுவேல் அவர்களின் பூதவுடல்! பூவுடலாகத் திகழ்ந்த ஊனுடலம் இன்று பூதவுடலாகப் பாரில் சாய்ந்து விட்டது; என்னே கொடுமை? என்னே மனிதர்தம் வாழ்க்கை?

இம் மானிலத்தே மன்பதையார் பலர் உதிக்கின்றனர், வாழ்கின்றனர், மரிக்கின்றனர். இது இயற்கை நியதி. பிறப்பவர் யாவரும் இறப்பதுறுதி; ஆனால் வாழுங் காலத்து வாழ்வாங்கு வாழ்ந்து ஊனுடலம் உருவமழிந்த பின்பும்; எத்தனையோ, எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின்பும் தம் மாற்றல் குன்றாத் தனிநிலை பேணுபவர் நீண்ட பெரும் ஆழியில் தனித்தவோர் தரளத்தை ஒப்பவரேயாவர்; "அரிது அரிது மானிடராதல்" என்றார் நம் ஔவை மூதாட்டியார்; இவ்வரிய ஜென்மத்தை அருமையாகப் பயன்படுத்துவது மானிடர்தம் கடமையன்றோ! திருமதி சாமுவேல் அவர்களும் தம் அரிய ஜென்மத்தை அன்பும், அருளும் கொண்டு அருமையாகவே கழித்தார் என்றால் அது மிகையாகாது; அன்னாரது ஆன்மா சாந்தி அடைவதாக.

திரிபுவன சுந்தரி நவரட்னம்,
(12² Science.)

மானவர் பகுதி — தமிழ்

பரந்தன் இரசாயனப் பொருட் கூட்டுத்தாபனம்

நமது நாடு சுதந்திரமடைந்தபின் நமது நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்ய பல தொழிற்சாலைகளும் திட்டங்களும் ஆக்கப்பட்டன; பரந்தன் இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையும் அவற்றில் ஒன்றாகும்.

இத் தொழிற்சாலையில் எரிசோடா, பாசியவாயு (குளோரீன்), டி. டி. ரி. (D. D. T.), சல்பூரிக்கமிலம், லோறைல், அற்ககோல் ஆகியன தயாரிப்பதற்காக திட்டமிடப்பட்டது; இத்திட்டம் நம் அரசாங்கத்தால் 1951-ம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் "மன்டர்ஸ்ரம் அண்ட் பாட்னர்ஸ்" நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது;

இத் தொழிற்சாலைக்குத் தேவையான பொறிகளை விநியோகிப்பதற்குச் சுவிற்சலாந்து நாட்டின் எல். டி. ரோல் எஸ். ஏ. நிறுவனத்தார் ஒப்புக்கொண்டனர். இயந்திரங்கள் இரு வருடங்களின்பின் இலங்கையை வந்தடைந்தன.

இத் தொழிற்சாலைக்கு ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர்களின் அவசரகால நிதிச் சபையினர் உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் D. D. T. இயந்திரத்தை நன்கொடையாக அளித்தனர்; 1957-ம் ஆண்டு பணிப்பாளர் சபை பொறித் தொகுதியைத் திருப்பி அனுப்புமாறு அமைச்சிற்குச் சிபாரிசு செய்தது. இதற்காகக் கூறப்பட்ட காரணங்கள் D.D.T. யின் (1) தேவை குறைந்து வருதல்; (2) உற்பத்திச் செலவு அதிகமாயிருத்தல். இதன் விளைவாக D. D. T. செய்யப் பயன்படுத்த நினைத்த குளோரீனைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினை ஏற்பட்டது;

இத் தொழிற்சாலைக்கு உரிய கட்டிடத்தை எழுப்ப 1956-ம் ஆண்டு கைத் தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை அமைத்தார்; ஆண்டின் இறுதிப் பகுதியில் இயந்திரங்களை நிர்மாணிக்கும் பொறுப்பை நமது பொறியியல் நிறுவனத்தினர் ஏற்றுக் கொண்டனர். இதன் எல்லாப் பங்குகளும் அரசாங்கத்திற்கே உரிமையாகும்;

இத் தொழிற்சாலையில் 1958-ம் ஆண்டு பங்குனி மாதம் பரீட்சார்த்தமாக இரசாயனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன; 1960-ம் ஆண்டிலிருந்து வர்த்தக ரீதியிற் தயாரித்தனர்: இலங்கையில் முதன் முதல் வர்த்தக ரீதியில் எரிசோடா உற்பத்தியை ஆரம்பித்த கலம் டி நோரு டி ரெல் நுண்டுனேத் தகடு மின்கலக் கூட்டமாகும்: இதிற் காணப்பட்ட உருவகப் பிழையை இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் கலாநிதி எஸ்: ஞானலிங்கம் அவர்கள் திருத்தி அமைத்தார்; இவருக்கு மேட்டர் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம் உதவியளித்தது: மின்கலக் கூட்டத்தில் ஆரம்பத்தில் காணப்பட்ட உருவகப் பிழையால் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தன. நமது பொறியியலாளர் அவற்றில் இடையருக் கவனம் செலுத்தி நிவிர்த்தி செய்துள்ளனர். மதிப்பிடப்பட்ட உற்பத்தியைக் கடந்த மூன்று வருடங்களாகவே அடைய முடிந்தது:

இத்தொழிற்சாலை உற்பத்தியில் ஏற்படும் லாபம் நம்மவரை, அதனை விஸ்தரிக்கும் எண்ணத்தைத் தூண்டுகின்றது. அதே வேளையில் வெளிநாடுகளில் எரிசோடாவின் விலை கிட்டத்தட்ட இருமடங்காகியதும் இவ்வெண்ணத்தைத் தூண்டுகின்றது: விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் இருமடங்கு எரிசோடாவும், கிட்டத்தட்ட முந்தியளவு குளோரீனும் உற்பத்தியாக்கப்படும். மீதி ஐதரோகுளோரிக்கமிலம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும்; அத்துடன் கல்சியம் குளோரைட், பெரிக் குளோரைட், மேசை உப்பு என்பனவும் சிறிதளவிற் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். விஸ்தரிப்புத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த மந்திரிசபை அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது:

எரிசோடாவின் அதிகபகுதி சவர்க்காரம் தயாரித்தலிற் பயன்படுகின்றது. வீட்டுப் பாவனைப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றது. நெசவு ஆலையில் வெளிற்றல், சாயமிடல் என்பவற்றிற்கு உபயோகிக்கப்படுவதுடன் ரேயன் (rayon), தயாரிப்பிலும் பப்ரிக் (fabric) துணிக்கு (silky) பட்டுப்போன்ற மினுமினுப்பைக் கொடுக்கவும் உபயோகிக்கப்படுகிறது. பீனோல் (Phenol), கிரசோல் (cresol) போன்ற வற்றை நிலக்கரித் தாரிலிருந்து பிரித்தெடுக்கவும் உபயோகிக்கப்படுகிறது. கடதாசி ஆலையிலும், பிறநாடுகளில் போக்சைட் (bouxite) என்னும் கனிப்பொருளிலிருந்து அலுமினியம் பிரித்தெடுத்தலிலும் உபயோகிக்கப் படுகிறது.

குளோரீனின் அதிகளவு பகுதி கடதாசி உற்பத்தியில் கடதாசி வெளிற்றப் பயன்படுகிறது: சிறிதளவு தீரைச் சுத்திகரிக்கவும் துணி நெய்தலிலும் காபன் நாற் குளோரைட், முக்குளோரோ எதிலீன், குளோரல் போன்ற பலவகை இரசாயனப் பொருட்கள் தயாரிக்கவும் உபயோகிக்கப் படும்.

மேசை உப்பு அதிகளவு வீட்டுப் பாவனைக்கும், பிஸ்கட், மாஜரீன் ஆகியவற்றின் உற்பத்தியில் இடவும் உபயோகிக்கப் படும்:

பெரிக் குளோரைட் சவர்க்கார தொழிற்சாலையில் கிளிசரீனை வேறுபடுத்த உபயோகிக்கப்படும்.

ஐதரோ குளோரிக்கமிலம் இரும்பைச் செப்பனிடவும் துணி நெய்தல் மற்றும் கைத்தொழிலிலும் பயன்படுகிறது. அத்துடன் இவையெல்லாம் ஆய்வு கூடத்திலும் பயன்படுகிறது:

இப்படியாகப் பல உபயோகமுள்ள தொழிற்சாலைகளை அமைத்து நமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்தி செய்வதால் அந்நியச் செலாவணியைக் குறைக்க முடியும்: ஆனால் தற்போதைய நிலையில் இப்படியான புதுத் திட்டங்களை ஆரம்பிக்க முடியுமா என்பதுதான் பிரச்சினைக்குரிய விஷயமாகும்:

மலர்விழி கந்தசாமி,
12ம் விஞ்: பிரி:

இலங்கை நம் நாடு

இலங்கை என்னும் நாடு — அது
எழில் இலங்கும் வீடு
நலங்கள் எங்கும் நிறைந்த — நல்
பொழில்கள் சூழ்ந்த நாடு.

கோலமிகு இயற்கையன்னை கொலுவிருக்கும் நாடு
குபேரன் என்போன் ஆதியிலே ஆண்ட திருநாடு
சீலம்மிக்க பண்புகள் சிறந்திருக்கும் நாடு
செப்பு விவசாயம் மிகச்செழித்திடு நல்நாடு.

அலைகள் பலமேவும் ஆழிசூழ் நாடு
மலைகள் எங்கும் உயர்ந்த மகிமைநிறை நாடு
கலைகள் பலவும் கனிந்து களிப்பூட்டும் நாடு
நிலையான சொர்க்கமது நிறைந்திடும் நம்நாடு.

உலகினிலே புத்தமதம் உயர்ந்திருக்கும் நாடு
உண்மையான இஸ்லாமும் ஓங்கிடும் நம்நாடு
நிலைபெற்ற இந்துமதம் நிலவுகின்ற நாடு
ஏசுவின் பொன்மொழியும் இசைந்திடு நம்நாடு.

உண்மையின் ஞானமது உறைந்திடும் நாடு
உயர்வான இறைவன்பதம் அமைந்திடும் நாடு
நிகரற்ற மொழிகள்பல நிலவிவரும் நாடு
நினைவில் என்றும் நிலைத்துநிற்கும் எங்கள் வளநாடே.

ஜெயசிறி ஏரம்பமூர்த்தி,
12' கலை.

புற்றுநோய்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் முதுமொழிக் கிணங்க நாம் நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமாயின் எமது தேக ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருக்கவேண்டும். நோய்கள் வருவது இயற்கை. ஆனால் அவற்றிற்கு உடனடி நிவாரணம் அளிப்பதன் மூலம் அந்நோய்களை உடலினின்றும் விரட்டிவிட வேண்டும். கோடானுகோடி பொருட்செல்வம் இருந்தாலும் நோய்கள் ஏதாவது வந்து பற்றிக்கொண்டால் அது அவர்களின் வாழ்க்கை நிம்மதியைக் கைப்பற்றிவிடுகின்றது. இவ்வாறு நாம் நோய்கள் என்று குறிப்பிடும்போது புற்றுநோயும் அதில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கை ஏற்றிருப்பதனால் நாம் புற்றுநோய் என்றால் என்ன? அது ஒரு தொற்று நோயா அன்றி ஒட்டுவாரொட்டி நோயா எனச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

உடலில் பல்வேறு தொழில் புரியும் கோடிக்கணக்கான உயிர்க்கலங்கள் உள்ளன. எல்லா உயிர்க் கலங்களும் ஒரு குறித்த முறையில் இடைவிடாது பிரிவதும் பெருகுவதுமாக இருக்கின்றன. ஆனால் சில சமயங்களில் ஏதாவது கோளாறு காரணமாக ஒரு சில கலங்கள் அளவுக்கு அதிகமாகப் பெருகி உடம்பின் ஒரு பகுதியில் தேவைக்கு அதிகமான ஒரு வளர்ச்சியை அல்லது ஒரு கட்டியை உண்டாக்கி விடுகிறது. இது காலப்போக்கில் வளர்ச்சியடைந்து நல்ல உயிர்க் கலங்களையும் அழித்து ஈற்றில் நோயாளியின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடுகின்றது. இவ்வாறான கட்டி உண்டாவதே புற்று நோய் எனப்படும்.

புற்றுநோயானது கிருமிகளால் உண்டாவதில்லை. ஆதலால் இது ஒட்டுவாரொட்டி நோயோ அன்றித் தொற்று நோயோ அல்ல. அத்துடன் புற்றுநோயாளிகளுடன் அன்னியோன்னியமாகப் பழகிய எந்த வைத்தியருக்கோ அன்றி எந்தத் தாதிக்கோ இந்நோய் தொற்றியதாக எந்த வைத்திய சாத்திரத்திலும் காணப்படவில்லை. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு எட்டியவரையில் புற்றுநோய் ஒரு பரம்பரை நோயெனவும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆரம்பத்தில், பல்வேறு புற்றுநோய்கள் ஏற்படுதற்குப் பரம்பரைச் சான்றுகள் உண்டென நம்பப்பட்டது. எனினும் அச்சான்றுகள் வழி வழியாக வரும்முறை தெளிவற்றதாகவும், சிக்கலானதாகவும் இருந்ததால் அந்நம்பிக்கை கைவிடப்பட்டது. ஒருவர் தனது தாய், தந்தையர் இருவருக்கும் அல்லது அவர்களில் ஒருவருக்குப் புற்றுநோய் இருந்தமையை, சந்தேகிக்கத்தக்க நிலைமைகளைக் கண்டுபிடித்தற்கான ஒரு சான்முகமட்டும் கொள்ளலாமே தவிர, பெற்றோருக்கு இருந்தமையால் அவருக்கும் அந்நோய் வரும் எனப் பீதியடையத் தேவையில்லை. அத்துடன் பெற்றோர் புற்றுநோயினால் இறந்தபோதிலும் பிள்ளைகளுக்கு அந்நோய் வரவேயில்லை. ஒருபோதும் புற்றுநோய் வராத குடும்பங்களில் அந்நோய் தோன்றியிருக்கின்றது. எனவே இது பரம்பரை நோய் அன்று. புற்றுநோய் ஒரு தனி வருத்தம் ஆகும்.

இனி நாம் புற்றுநோய்க்கான அறிகுறிகளைப்பற்றி ஆராய்வோம். வாய், நாக்கு, சொக்கு, உதடு போன்ற இடங்களில் உண்டாகும் புண் மூன்று நாலு கிழமைகளாக மாறாதிருத்தல், விழுங்குவதில் சிரமம் ஏற்படுதல், காரணமில்லாத இருமல் அல்லது கம்மல், நீண்ட காலமாக இருந்துவரும் குரலடைப்பு படிப்படியாக நிறை குறைதல், உடம்பிலுள்ள காயின் அல்லது மச்சத்தின் பருமன் அல்லது நிறம் மாறுதல், அசாதாரண இரத்தஒழுக்கு என்பன, புற்றுநோயின் அபாய அறிவிப்புகள் என சந்தேகிக்கப்படுவன சிலவாகும். எனவே அவ்வாறு ஏதாவது அறிகுறி, தென்படும் ஒருவர் மேலும் காலந்தாழ்த்தாது உடலைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு ஒரு வைத்தியரின் ஆலோசனையை நாடவேண்டும். வலி (நோவு) ஏற்படுதல் புற்றுநோயின் ஆரம்பக்குறி அன்று. எலும்பு

அல்லது நரம்பு இழையத்தில் ஏற்படும் புற்றுநோயைத் தவிர ஏனைய இடங்களில் உண்டாகும் புற்றுநோய்க்கு வலியானது நோய் முற்றிவிட்டதை அறிவிக்கும் அறிகுறியே ஆகும்.

புற்றுநோயானது ஒட்டுவாரொட்டி நோயும் அன்று, தொற்று நோயும் அன்று, பரம்பரை நோயும் அன்று. எனவே புற்றுநோய் எவ்வாறு உடலில் பரவுகின்றது என ஆராயும்போது அது ஓர் இழையத்திலிருந்து வேறோர் இழையத்திற்கு நேரடியாகப் பரவும் எனவும், புற்றுநோய்க் கலங்கள் இரத்தக்குழாயினூடு வளர்ந்து உடம்பின் பல்வேறு பாகங்களுக்கும் இரத்தத்தின் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன எனவும் அறியப்பட்டுள்ளது.

புற்றுநோய் பெரும்பாலும் 30 அல்லது 40 வயதுக்குப் பின்புதான் தோன்றும். பலவேளைகளிலும் ஓர் இடத்தில் நெடுங்காலமாக இருந்த அழற்சி காரணமாகவே இந்நோய் ஆரம்பமாகிறது. இந்த அழற்சி பலவகைப்படும். அவற்றில் இரசாயனரீதியானது, வெப்பம் காரணமானது, சடப்பொருள் சம்பந்தமான உரசல் காரணமானது என்பவை சிலவாகும். உதாரணமாக இலங்கையில் புகையிலை, சுண்ணாம்பு போன்றன உண்டாக்கும் அழற்சி காரணமாக, அதிகமாக வெற்றிலை போடுவோருக்கு நாவில் அல்லது சொக்கில் இந்நோய் தோன்றுகின்றது. இவ்வாறே உடைந்த அல்லது நன்கு பொருந்தாத பல்லினால் நாவில் அழற்சி ஏற்பட்டு புற்றுநோய் வரலாம். இவ்வழற்சி சடப்பொருள் சம்பந்தமான உரசல் காரணமாக ஏற்பட்ட நோயாகும்.

இன்னும், புகைத்தல் வெப்பம் காரணமான அழற்சியை உண்டுபண்ணிப் புற்றுநோய் உண்டாவதற்கு ஏதுவாக இருக்கும் என நம்பப்படுகின்றது. சமீபகால பரிசோதனைகள் அமோகமாகச் சிகரெற் புகைத்தலுக்கும், சுவாசப்பைப் புற்றுநோய்க்கும் புள்ளிவிபரரீதியில் தொடர்பு காட்டியுள்ளன. அதாவது புற்றுநோய், பெண்களின் தொகையைப்போல் ஐந்து மடங்கு ஆண்களைத் தாக்கியிருக்கின்றது. அத்துடன் நாட்டுப்புறங்களில் வசிப்பவர்களைவிட நகரங்களில் வசிப்பவர்களிடையே சுவாசப்பைப் புற்றுநோய் காணப்படுவதால், தொழிற்சாலைகளில் உண்டாகும் புகைகள், இயந்திரங்கள் வெளிவிடும் புகைகள் போன்ற அழற்சி தரக்கூடிய காரணங்களால் இந்நோய் ஏற்பட்டிருக்கக்கூடும். எனினும் இத்தொடர்பு இந்நோய்க்கான காரணங்களிலொன்று என்பதை விஞ்ஞானிகள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. இருப்பினும் புகைப்பவர்கள், புகைத்தலைக் கைவிடுதல் நன்று. இன்றேல் அளவோடு புகைத்தல் நன்று.

புற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கும் போது சத்திரசிகிச்சைமூலம் அல்லது எக்ஸ் கதிர்கள் (X-rays) மூலம் இரேடியம் (Ra) மூலம் அல்லது இந்த மூன்றும் அடங்கிய கலப்புமூலம் சாத்தியமானவரையில் ஆரம்பக்கட்டத்திலேயே சிகிச்சை அளிக்கவேண்டும். ரேடியத்தின்மூலம் சிகிச்சை அளிப்பதைக் கண்டறிந்த விஞ்ஞானியான மேரி கியூரி அம்மையாரின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. ஆழமான இடம்பெற்றிருக்கும் புற்றுநோய் அணுக்களை அழிப்பதற்கு எந்தப் பூச்சுமருந்துக்கோ, எந்தத் தைலத்திற்கோ இழையங்களை ஊடுருவிச் செல்லும் சக்தி இல்லை.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" எனும் முதுமொழிக்கிணங்கிய வடஇங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகளான திரு. ஈ. ஏ. கஸ்பறி, டாக்டர் ஜே பி. டிக்கின்ஸன், பேராசிரியர் ஈ. ஜே. ஃபில்ட் என்போர் புற்றுநோயைப் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கையை விடக்கூடிய ஒரு முறையை அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். அதாவது மனிதனுடைய இரத்தத்திலுள்ள வெண்குழியங்கள் அவனது புற்றுக்கட்டியிலுள்ள ஒரு புரதத்தை இனங்கண்டுகொள்கின்றன. அப்புரதத்தினால் ஊக்குவிக்கப்படுகின்றன. இவ்வெண்குழியங்கள் மனிதனுக்குப் புற்றுநோயின் அறிகுறிகள் வெளிப்படையாகத் தோன்றுவதற்குச் சுமார் பன்னிரண்டுவருடங்களுக்கு முன்னதாகவே அவனது இரத்தத்தில் கண்டுபிடிக்கப்படலாம். இவ் வெண்குழி

யங்கள் உடம்பிலே தோன்ற ஆரம்பித்த காலத்திலேயே அவற்றுல் ஊக்குவிக்கப் படும் இந்த விசேஷ குழியங்களும் உடலிலே தயாராகிவிடும்;

எனவே புற்றுநோயின் பிரதான அறிகுறிகள் உடலில் எங்காவது தென்படுவதற்கு முன்னரேயே இவ்வெண்குழியங்களைக் கண்டுபிடித்தால் புற்றுநோயை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாம்: புற்றுக் கட்டியிலுள்ள புரதத்தினுல் ஊக்குவிக்கப் படும் வெண்குழியங்களைக் கண்டுபிடிக்க முடியுமாயின் அந்த வெண்குழியங்களை ஊக்குவித்த புரதத்தையும் என்றுவது ஒரு நாள் கண்டுபிடித்தே தீரலாம் என அவ்விஞ்ஞானிகள் (ஃபீல்ட்வினர்) உறுதி கூறுகின்றனர்: அத்துடன் இப்புரதத்தைக் கண்டுபிடித்தால் அதற்கெதிரான எதிர்ப்பு சக்தியை ஆய்வுகூடங்களில் தயாரித்து ஊசி மூலம் உடம்பினுள் ஏற்றுவதால், புற்றுநோய்க் கலங்களுடன் போராடி அவற்றை அழித்துவிடமுடியுமென இக்குழுவினர் நம்புகின்றனர்: வடஇங்கிலாந்தைச் சேர்ந்த இவ்விஞ்ஞானிகளால் ஆராயப்படும் இம்முறை பெரியம்மை, சுக்கல், கசரோகம் போன்ற தொற்று நோய்கள் வராது தடுப்பதற்கு ஏற்றும் தடுப்பு ஊசி முறைபோன்றது;

எனவே புற்றுநோய் வராது தடுப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படலாம்: இந்த நூற்றுண்டு முடிவடைவதற்கிடையில் புற்றுநோயை ஒழிக்கமுன்பு கூறப்பட்ட முறை வந்துவிடும் என இலட்சியக் கனவு காண்கின்றனர் ஃபீல்ட் குழுவினர். அவர்களது கனவு நனவாகவேண்டும் என்பதே உலக மக்களின் பேரவாவுமாகும்;

சோதிமலர் சரவணபவன்,
12ம் விஞ்: (1973)

மனிதன் வாழ்வில் விஞ்ஞானம்

கிழங்குண்டு, தழையுடுத்தி, வேட்டையாடி மரங்களிலும் குகைகளிலும் வாழ்ந்தான் ஆதிகால மனிதன்: ஆனல், இன்றோ அப்பப்பா !! எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. வானத்தில் பறக்கிறன்: அம்புலியைச் சாடுகிறன். இதற்கெல்லாம் விஞ்ஞானம் அவனுக்கு உதவுகிறது;

போக்குவரத்தில்தான் எவ்வளவு புதுமை. ஆதிகாலத்தில் மனிதன் கால்தடையாகவே நடந்து தனது தேவையைப் பூர்த்தி செய்வான்: ஆனல் இன்றோ எவ்வளவெவ்வளவு புதுமையான வாகனங்கள் அதிசயமூட்டும் வகையில் உருவாகியுள்ளன. துள்ளுமீனைக் கண்டு துள்ளிய மனிதன் இன்று நீராவிக்கப்பல் போன்றவற்றைச் செய்து தானும் ஒரு துள்ளும் மீன் ஆனன்: ஊரும் பிராணியைக் கண்டு பொருமைப்பட்ட மனிதன், புகையிரதம் போன்ற வாகனங்களைச் செய்து இன்று தானும் ஒரு ஊரும்பிராணி ஆனன்: பறவைகள் உல்லாசமாகப் பறந்து திரிவதை பொருமைக்கனல் பொங்க கோபப் பார்வையோடு பார்த்த மனிதன், இன்று வானூர்தி போன்றவற்றைச் செய்து தானும் ஒரு பறவையானன்: இவ்விதம் பல வாகனங்களைச் செய்து உலகத்தைச் சுருக்குவதற்குப் பக்கபலமாக இருந்தது எது? விஞ்ஞானம்தானே,

விவசாயத்தில் விஞ்ஞானம் செய்த ஆக்க வேலைகள் எத்தனை, எத்தனை: முன்பு மனிதன் மாடுகளின் உதவியோடு கலப்பை கொண்டு கஷ்டப்பட்டு உழுதான்: விஞ்ஞானம் உழுவதற்கு ஒரு இயந்திரத்தை உருவாக்கித் தந்து மனிதனின் கஷ்டத்தைப் போக்கியது. முன்பு மனிதன் கையால் வீசி விதைத்தான். ஆனல் இன்று, விதைப்பதற்கு ஒரு இயந்திரம் உருவாகியுள்ளது: முன்பு மனிதன் கையால் களை பிடுங்கினன். ஆனல் இன்றோ, அதற்கும் ஒரு இயந்திரம் முளைத்துள்ளது: முன்பு மனிதன் அரிவாள் கொண்டு தானே அறுவடை செய்தான். அத்தகைய கஷ்டத்

தைக் கண்டு இரங்கிய விஞ்ஞானம் அதற்கு மோர் இயந்திரத்தை ஆக்கிக் கொடுத்தது. சூடுமிதிக்கும் இயந்திரம், பூச்சிகொல்லிகள், களைகொல்லிகள் முதலிய வற்றோடு நெல்லை அரிசியாக்கும் இயந்திரம், அரிசியை மூட்டையாக அடைக்கும் இயந்திரம் போன்றவையும் உருவாகியுள்ளன. காரணம் விஞ்ஞானத்தின் வளர்ச்சி.

மருத்துவத்தில்தான் எவ்வளவு பெரிய மாற்றங்கள். முன்பெல்லாம் மக்கள் அம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து முதலிய நோய்கள் வந்தால் இறப்பது தான் மருந்து என்றிருந்தனர். ஆனால் இன்றோ விதம்விதமான மருந்துகள் உதித்துள்ளன. விசர்நாய்க் கடிக்கு மருந்தை லூயிபாஸ்டர் என்னும் ஒருமனிதன் கண்டு பிடித்தான். முன்பெல்லாம் இருதயநோய் வந்தால் மக்கள் இறந்துவிடுவார்கள். இன்று பழுதடைந்த இருதயமுடையவர்கள் இருப்பின் அவருடைய இதயத்தை எடுத்துவிட்டு, இறந்த ஆனால் நல்ல இதயமுடையவரின் இதயம் நோயாளியின் உடலுக்கு மாற்றப்படுகிறது. இவ்விதம் நோயாளியை வாழவைக்கிறது விஞ்ஞானம்.

வீட்டில் விஞ்ஞானம் செய்த புதுமைகள்தான் எத்தனை, எத்தனை! சமையல் செய்ய ஒரு இயந்திரம், நீரைக் கிணற்றிலிருந்து எடுக்க ஒரு இயந்திரம், மரக்கறி வகை, இறைச்சிவகை வெட்ட ஒரு இயந்திரம் என்னும் இயந்திரங்களை உதவியது எது? விடை விஞ்ஞானமேயாகும். இரவைப் பகலாக்குவதும் விஞ்ஞானமே. மின்சார வடிவில் விஞ்ஞானம் செய்த உதவிகள் அளப்பரியன. மகிழ்ச்சியூட்டும் வானொலி, இன்பக்கடலை அளிக்கும் பேசும் படம், இவையெல்லாம் உருவாக்கக் காரணம் விஞ்ஞானம்தானே.

தொழிற்சாலைகளில் விஞ்ஞானம் செய்யும் உதவிகள்தாம் எவ்வளவு. மனிதன் செய்கின்ற வேலைகளையெல்லாம் செய்கின்றன பாரிய பல இயந்திரங்கள். அப்பாரிய பல இயந்திரங்களையெல்லாம் இயக்குகின்றது மின்சாரம். இவையெல்லாம் விஞ்ஞானம் செய்த உதவிகளே.

ஒரு கிராமத்தில் வாழ்ந்த ஒரு மனிதன் அடுத்தகிராமம் எது என்றே தெரியாமல் கிணற்றுத்தவளை போல ஆதியில் வாழ்ந்தவன், இப்போது ஆயிரம்மைல்களுக்கு அப்பாலுள்ள நாட்டை அண்டைவீடெனப் பாவிக்கின்றான்; அங்கேயுள்ள தனது உறவினர், நண்பர் போன்றவர்களுடன் நினைத்த போதெல்லாம் கலந்துரையாடுகின்றான்.

வானரங்களோடு வானரங்களாக மரம் விட்டு மரம் தாவிப் பாயும்போது இலைகளினூடும், கிளைகளினூடும் தெரிந்த அம்புலியை மகிழ்ச்சியூட்டும் கலைப்பொருளாகமதித்தவன், இன்று அதையே தனது விஞ்ஞான கூடமாக மாற்றியமைத்துள்ளான். முன்பு அம்புலியைக் காட்டி மகனுக்குச் சோறு ஊட்டிய தாய், இன்று அம்புலியில் இருக்கும் தந்தையை மகனுக்குக் காட்டுகிறாள். இதிலிருந்து விஞ்ஞானம் மனிதனது வாழ்விலே மாபெரும் மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இங்கிலாந்திலுள்ள மக்கள் வங்கியொன்றிலே பணத்தை கணக்குப் பார்ப்பதற்கு ஒரு இயந்திர மனிதனை உருவாக்க உதவி செய்தது விஞ்ஞானம். ஆயிரமாயிரம் படிகளைக் கொண்டுள்ள மாடிவீடுகளைக் காலால் ஏறிச் செல்லும்போது வீணாகும் நேரத்தை மிச்சப்படுத்துகிறது படியேறுவதற்கு உதவிசெய்யும் இயந்திரம்.

இவ்விதம் ஆக்கவழியிலே செல்கின்ற விஞ்ஞானம், அழிவுநடையிலும் செல்கின்றது என்பதை உறுதிப்படுத்துகிறது அணுகுண்டு, ஐலவாயுக் குண்டு போன்ற தீங்கு விளைவிக்கின்ற பொருட்கள்.

கடந்த முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தத்தின் அழிவுகளுக்குக் காரணம் விஞ்ஞானமே. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானிலுள்ள நகரங்களான குரோசீமா, நாகசாகி போன்ற நகரங்கள் அழிந்ததற்குக் காரணம் விஞ்ஞானமே. இனி, மூன்றும் உலக மகாயுத்தம் என்ற ஒன்று நடந்தால் உலகில் மருந்துக்குக்கூட ஒரு உயிர் மிஞ்சாது என்பது திண்ணம்.

ஆகவே விஞ்ஞானம் அழிவு வழியில் அன்னநடையிடாது, ஆக்கவழியிலே பீடு நடையிட வேண்டும். இதற்கு ஆண்டவன் அருள் புரிவாராகுக.

ஞானவதி சேவற் கொடியோன்,
9 விஞ். B; (1973)

நிலவு விளக்கிய விதி

நிலவே நேற்று எங்கே போனாய்
நீலவானில் காணவில்லையே

எங்கும் இல்லை எந்தன் குழந்தாய்
எழில்முகில் திரையில் மறைந்தேன் அந்தோ

முகில் கிழிந்தூடே வரமுடியாதோ
முழு நேரமும் ஏன் மறைந்தாய் மதியே

முகிலும் எங்கோ நானும் எங்கோ
முட்டித் தள்ளவும் விருப்பமே இல்லையே

வலியுனக் கில்லையோ வானின் முத்தே
வந்து வந்து பின் தேய்வதேனே

என்னை மறைத்திடும் எழில் முகில் தானே
எங்கும் மதி மறைத்திடும் விதியெனக் காண்பாய்

விளங்கக் கூறிடு விண்ணின் மணியே
விதியெது வாழ்வில் நமக்கென்ன தொடர்பு

தலையில் எழுதிய பலன்தான் விதியாம் அதைத்
தவிர்த்திட யார்க்கும் வலியே இலையாம்

விதியை மதியால் வென்றிடு என்றே
விதந்துரைத்திட்ட வார்த்தையும் பொய்யோ

ஊழிற் பெருவலி யாவுள குழந்தாய் இதை
உணர்ந்தே வாழ்ந்திடு உலகினில் நீயும்

கௌரி தாமோதரம்பிள்ளை,
10 விஞ் (1973)

எதிர்கால இலங்கை

ஆதிபகவனின் அரும்பெரும் படைப்புக்களில் ஆறறிவுடைய மனிதப் படைப்பு அரியதாகும். மனிதனைத் தவிர்த்து மீதியான விலங்கினங்கள் எல்லாம் ஐந்தறிவினை உடையவை. மனிதனே அவ்வைந்தறிவுடனும் பகுத்தறிவு என்னும் முக்கிய அறிவையும் கொண்டிருக்கிறான். இதனாற்றான் இவ்வுலகின் கண் பிறக்கின் மானிடராகவே பிறக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. "அரிது, அரிது மானிடராதல் அரிது" என முன்னைய சான்றோருள் ஒருவர் கூறியிருப்பக் காண்கிறோம். எல்லாவற்றிற்கும் மூலகர்த்தாவாகிய அப்பகுத்தறிவைக் கொண்டே நாம் சிந்தித்துச் செயற்படுகிறோம். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மனிதன், எதிர்காலத்தில் நமது இனமும், நம்நாடும் எவ்வாறிருக்கும் எனச் சிந்தித்திருப்பான். இக்கால மனிதனும் எதிர்காலத்தில் நமது நாடாகிய இலங்கையைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்படுவான். நானும் என் அறிவுக்குட்பட்டவரை, ஆனால் கற்பனைக் கெட்டியவரை எதிர்கால இலங்கையைக் கற்பனை பண்ணிப் பார்க்கின்றேன்.

நமது நாடு பலவகைப் பிரச்சினைகளால் இன்னும் முன்னேற முடியாமல் பின்தங்கிய நிலையிற் காணப்படுகிறது. அப்பிரச்சினைகள் நம் நாட்டின் வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கின்றன. முக்கியமாகப் பொருளாதாரப் பிரச்சினையும், இனப்பிரச்சினையும் நம்நாட்டைப் பேரிடிகளாகத் தாக்கிய வண்ணம் இருக்கின்றன. முதலில் இவ்விரு பிரச்சினைகளையும் கவனமாகத் தீர ஆலோசித்துத் தீர்த்து வைப்போமாயின் நம்நாட்டை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்திச் செல்வது சுலபமாகும். முதலில் மிக முக்கிய பொருளாதாரப் பிரச்சினையைச் சிந்திப்போம்.

நாற்புறமும் கடலாற் சூழப்பட்டிருக்கும் இலங்கைத் தீவில் சமவெளிப் பிரதேசமும், மலைப்பிரதேசமும் உண்டு. சமவெளிப் பிரதேசத்தில் பிரதான உணவுப் பயிர் நெல்உட்படப் பலவகையான தானியங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள் என்பனவும் பயிரிடப்படுகின்றன. இலங்கை மக்களின் பிரதானமான உணவுப் பயிர் நெல் ஆகும். இலங்கை ஒரு காலத்தில் பிறநாடுகளுக்கு நெல்லைப் பெருமளவு ஏற்றுமதிசெய்து கிழக்காசியாவிலே ஒருதானியக்களஞ்சியம்எனப் பெயர்பெற்றிருந்ததாகஅறிகிறோம். ஆனால் தற்போது நமக்கு அன்றாடத் தேவைக்கான நெல் கிடைக்காமற் கூடப் பட்டினியாற் சிலர் அவத்தைப்படுகின்றனர். மக்கள் ஏதோ தம் வாழ்க்கையைக் கழிக்க வேண்டுமே என விரக்தியாகச் சீவிக்கின்றனர். பெரும் பணம் கொடுத்துப் பிறநாடுகளின் வாயை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்காலத்தில் நாம் எல்லோருமாக முழுமூச்சுடன் பழையபடி உற்பத்தியைப் பெருக்குவோம். மீண்டும் நாம் பல வெளிநாடுகளுக்கு நெல்லை ஏற்றுமதி செய்யத் தயாராக இருப்போம்.

அகில இலங்கையினத்தினதும் கடும் உழைப்பினால் வெகு சமீபத்திலேயே நாடு தன்னிறைவை எய்திவிட்டிருப்பதைக் காண்போம். முன்னைய அரசர்கள் கட்டிய குளங்களைத் திருத்தியும், மகாவலிகங்கையைக் கடலுள் விழவிடாமற் காட்டுப் பிரதேசங்களுக்கு நீர்ப்பாய்ச்சியும் உற்பத்தி பெருக்கப்படும். எதிர்காலத்திற் காடுகளெல்லாம் அழிக்கப்பட்டுக் கழனிகளாகக் காட்சியளிப்பதைக் காண்போம். பெரும் பழத்தோட்டங்களும், பாற்பண்ணைகளும் பரந்து பளிச்சிடுவதைப் பார்க்கலாம். மக்கள் நெற்றிவியர்வை சிந்த மிகுந்த சுறுசுறுப்புடன் உழைப்பதைக் காணலாம். கிராமங்களெல்லாம் பட்டினங்களாகத் திகழ்வதைக் காணலாம். பல நகரங்களினூடாக மட்டுமன்றிப் பட்டினங்களினூடாகவும் புகையிரதங்கள் ஓடுவதைக் காண்போம். புதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கும் கிராமங்களில் எல்லாம் மின் விளக்குகள் மின்னுவதைக் காணலாம்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப் பட்டு ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு வேலையை வைத்துப் பொறுப்புணர்ச்சி யுடன் நடந்து கொள்வதைக் காணலாம். நாட்டு மக்கள் தமக்கு வேண்டிய உணவு, உடையைத் தம்முள் பங்கிட்டுக் கொள்வ தைப் பார்க்கலாம். பிற்போக்குக் கொள் கைகளையும், மூட நம்பிக்கைகளையும் கைவிட்டு நவீன நாகரிகங்களை மக்கள் கடைப்பிடிப்பதைக் கண்டு களிக்கலாம். மக்கள் தமக்கு வேண்டிய உப உணவுப் பயிர்களைத் தாமே உற்பத்தி செய்வதைக் காணலாம். எங்கும் விவசாய விரிவாக்க நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் விவசாயக் குழுக்கள் பல நாட்டிற் திரிந்து மக்களுக்கு விவசாயத் திட்டங்கள் பற்றி விபரிப்பதையும் பார்த்து இரசிக்கலாம்.

வெளி நாடுகளிற் தோன்றிய விஞ்ஞானி களைப் போன்று பல விஞ்ஞானிகள் இலங் கையிற் தோன்றி அரிய சாதனைகளைக் கண்டு பிடிப்பதைப் பார்த்து அதிசயிப்போம்; நோய்களைத் தடுக்கும் தடுப்பு மருந்துகள், ஊசி முறைகள் என்பனவும் இருதய மாற் றுச் சிகிச்சை என்பனவும் நம்நாட்டில் நவீன முறையாகப் பரவியிருக்கக் காண் போம். மற்றும் இயந்திரங்கள் மோட்டார் வண்டிகள், புகையிரதங்கள், ஆகாய விமான உதிரிப் பாகங்கள், வானொலிகள், ஆய்வு கூட உபகரணங்கள் என்பனவும் எம் மாற் தயாரிக்கப்படக்கூடிய ஆற்றல் நம்மி டையே காணப்படும். ஆக்கிரமிப்புக் கொண்ட ஒரு சில வல்லரசுக்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்கப் பலவகையான நவீன ஆயுதங்களையும், போர் விமானங்கள், கப்பல் கள், போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல் கள் என்பவற்றையும் செய்வோம்; பல இடங்களிலும் தொழிற்சாலைகள், கைத் தொழிற் பேட்டைகள் என்பன நிறுவப்பட் டிருக்கும்.

நமது நாட்டின் வடபகுதியிலும், மன் னார், புத்தளம் ஆகிய இடங்களிலும் எண் ணெய் வளம் உண்டு எனச் சோவியற் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்; அப் பகுதிகளில் கிணறுகள் தோண்டப்படவுள் ளன; இதனால் எதிர்காலத்தில் பல எண் ணெய்க் கிணறுகளும், எண்ணெய்ச் சுத்தி கரிப்பு நிலையங்களும் காணப்படும். எம் மாற் செய்யப்பட்ட பல கப்பல்கள் எண் ணெயை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வ தைக் காண்போம்; இலங்கையின் கரை யோரப்பகுதிகளில் உள்ள கடல்களில் மீன் நிறையக் காணப்படுகிறது; எதிர்காலத் தில் கரையோரங்களில் பல மீன்பிடி நிலையங் கள் நிறுவப்பட்டு நவீன வசதிகளுடன் பெருமளவு மீன்கள் பிடிக்கப்படும்; எமக் குத் தேவையானது போக மிகுதி தகரங் களில் அடைக்கப்பட்டு வெளிநாடுகட்கு அனுப்பப்படுவதைக் காண்போம்; இவ் வாறுக ஒவ்வொரு துறையிலும் தன்னிறை வுடன் விளங்குவதால் எதிர்காலத்தில் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்து விட்டி ருப்பதைக் காண்போம்;

அநியாயம் ஒழிந்திடக் காண்போம்; ஏழ்மை அகன்றிடக் காண்போம்; சமதர்மங் காண்போம்; தரித்திரம் நீங்கிடக் காண்போம்; எங்கும் சோஷலிசம் பரவிடக் காண்போம்; "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!" எனுங் குரல் ஒங்கிடக் காண் போம். தமிழினமும், சிங்களவினமும் சமா தானமாகக் கூடித் தம் பிரச்சினைகளைத் தீர்த்து சுமுகமாக வாழ்வதைக் காண் போம்; தமிழர்கள் தம் உரிமைகளைப் பெற் றுச் சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமை யாக வாழ்வதைக் காண்போம்;

முடிவாக, நம்நாடு இயற்கைவழகில் சுவிற்சர்லாந்தோ என ஐயுறவும், பொரு ளாதார வளர்ச்சியில் அமெரிக்காவோ என ஏங்கவும் வைக்கக்கூடியதாக இலங்கிடக் காண்போம். இவை எல்லாம் எப்போது நம் எதிர்கால இலங்கையில்.....

இலகவத் இராசரட்னம்,
10 விஞ்; A (1973);

நவராத்திரியில்...



வாணி வழிபாடு

பாலர் கலைவிழா
1973

கண்ணனுடன் கோபியர் நடனம்



வில்லுப் பாட்டு

பூம்புகாரில் இந்திரவிழா

பூம்புகார் நகரம் புதுவிழாக் கோலம் பூண்டு எழிலுடன் விளங்கியது. வானத்தின் கீழ்மூலையில் வெண்மதி முழுநிலா விரித்துக்கொண்டிருந்தது. பூம்புகார் நகரமோ விழாவுக்கான புதுமையழகுகளைப் பூண்டு கொள்ளத் தொடங்கிவிட்டது. விழாவுக்கான புத்துணர்வும் புதுமகிழ்வும் பெற்றுவிட்டது.

காவிரிக்கடலின் கரையில் எவ்வளவு பெருங்கூட்டம். கரையே இல்லாதது போல் மக்கள் திரண்டிருந்தனர். எத்தனைவித ஒலிகள், எத்தனைவித ஒளிகள் எத்தனைவகை மணங்கள். ஆடவரும், பெண்களும், இளையோரும், முதியோரும், சிறுவரும், சிறுமியருமாக அழகாகவும் நன்முகவும் அணிந்தும் உடுத்தும் வந்திருந்தனர்.

நோக்கும் இடமெங்கும் கீத வாத்தியங்களில் இனிமை திகழ்ந்தது; இந்திரவிழாவுக்காக எத்தனைவிதமான கடைகள் காவிரிப்பூம் பட்டினத்தில் உண்டோ, அவ்வளவும் அக்கடற்கரைக்கு வந்திருந்தன; இன்ன இன்ன கடையில் விற்கப்படும் பொருட்கள் இவையிவை என்பதை அறிவிக்க ஏற்றிய பல நிறக் கொடிகள் காற்றில் சடசடவெனப் பறந்துகொண்டிருந்தன;

பூவும் சந்தனமும் கூவிக்கூவி விற்கும் மணம்நிறைந்த பகுதிகள், பொன்னும் மணியும், முத்தும், பவளமும், வைடூரியமும் மின்னும் ஒளிமிகுந்த கடைகள், பட்டுந் துகிலும் பகர்ந்து விற்கும் கடைகள் வெற்றிலை விற்கும் வியாபாரிகளின் கடைகள் ஆகிய எல்லாம் நிறைந்து கொடுப்போர் குரலும் கொள்வோர் குரலுமாகப் பேரார வாரம் மிகுந்து கடற்கரை கடைக் கரையாகவே மாறியிருந்தது; ஆனால் செல்வச் செழிப்புமிக்க பட்டினத்து பாக்கத்து மக்களும் மரூஉர்பாக்கத்து மக்களும் கடற்கரையில் வசித்துவந்த யவனர்களும் எல்லோரும் கடற்கரையிலே கூடிவிட்டதனால் நகரமோ வறுமையடைந்து விட்டாற்போல் வெறுமை பெற்றிருந்தது. இப்படியாக மாபெரும் விழாக்கோலம் பூண்ட அவ்வழகிய கடற்கரையின் மேற்குக் கோடியில் மற்போர் நடந்துகொண்டிருந்தது;

அத்துடன் மற்போர் நடந்துகொண்டிருந்த இடத்தில்தான் அதிகமான பரபரப்பு காணப்பட்டது. கூத்து, இசை, நடனம், சமயவாதம் எல்லாம் நிகழ்ந்துகொண்டிருந்த அரங்கங்களையெல்லாம்விட மற்போர் அரங்கத்தின் ஆர்வம் காரணமாக ஆண்களும் பெண்களுமாக இளவயதினர் மிகுந்து கூடியிருந்தனர்;

முழுமதியின் ஒளிபரவும் வெண்மணற் பரப்பில் பலவகைக் கோலங்களைப் பாங்குறப் புனைந்திருந்த பட்டினப்பாக்கத்துச் செல்வநங்கையர் கந்தருவ அரம்பையர் போல் காட்சியளித்தனர். சில செல்வக் குடும்பத்து இளநங்கையரும் எட்டிப் பட்டம்பெற்ற பெரும் வணிகர்களின் அழகு மகளிரும் சிலர் பல்லக்குகளில் அமர்ந்தவாறே திரையைவிலக்கி மற்போர்க் காட்சியையும் மற்றும்பல இனிய காட்சிகளையும் கண்டு களித்துக்கொண்டிருந்தனர்;

இப்படியாகப் பூம்புகாரின் இந்திர விழா ஒவ்வொரு கணமாக இனிமையாக நிறைவேறிக் கொண்டிருந்தது. முழுமதி நிலவும் இதைப் பார்த்துப் புன்னகைபூத்துக் கொண்டிருந்தது;

உபா: சண்முகநாதன்
9 விஞ். 'A' (1973)

(15-9-74 அன்றைய 'சுடர்' பத்திரிகையில் வெளிவந்த 'பாஞ்சாலி சபதம்' பற்றிய 'மாலி'யின் விமர்சனம்.)

அகில இலங்கையிலும் முதலிடம்பெற்ற 'பாஞ்சாலி சபதம்'

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்" என்ப தனை உலகுக்குக் கற்பித்தது மகாபாரதம். அதிலே: அம்மி மிதித்து, அருந்ததிகாட்டி, வேதச்சுடர் முன் மணஞ்செய்து பாதகர்க குப் பரிசளிக்கப்பட்ட பாஞ்சாலி, பேயரசு செய்யும் நாட்டில் சாத்திரத்தைப் பிணந் தின்ன — துகிலினை மன்றிலே உரிதலுற்று - கண்ணபிரான் அருளால் அவை வண்ண வண்ணச் சேலைகளாய் வளர — வஞ்சகர் தலைகவிழ — அவர்களின் குருதியைத் தன் கூந்தலிற் பூசினலன்றி அதனைச் சீவி முடி யேன் என்று சபதம் செய்கின்ற சம்ப வத்தை அற்புதமாகச் சித்தரித்து — அரு மையாக, பிரமாதமாகத் தயாரித்து, கல்வி அமைச்சினுல் நடாத்தப்பட்ட அகில இலங் கைப் போட்டியில் முதற்பரிசையும் பெற் றிருக்கிறது "பாஞ்சாலி சபதம்"—நாட் டிய நாடகம்:

இந்தப் பெருமைக்குரியவர்கள் பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையினர்:

நடனமே பயின்றிராத மாணவிகளைக் கொண்டும் இப்படியொரு நாட்டிய நாட கத்தை இவர்கள் தயாரித்திருப்பது வியப் பிற்குரியது, பாராட்டுக்குரியது:

பாஞ்சாலியைத் தவிர அனைத்தும் ஆண் பாத்திரங்கள்: இந்த ஆண்பாத்திரங்களை ஏற்ற பெண்கள் வெகு சாதுரியமாக அவற்றை அணுகுகிறார்கள்.

துச்சாதனனுகத் தோற்றுபவர் கம்பீர மாக, கர்வமாக, துடிப்போடு, மிகைபடா மல், பிரமாதமாகச் செய்கிறார். இவ்வாறே துரியோதனன், விகர்ணன் கூற்றைக்கேட்டு வெகுண்டெழும் கர்ணன்; வீறுகொண்ட வீமனிடம் "கட்டுண்டோம் பொறுத்திருப் போம், காலம் மாறும் தர்மத்தை அப் போது வெல்லக் காண்போம்" என்று சமாதானங் கூறும் அர்ச்சுனன் ஆகியோ ரும் அற்புதமாக ஆடுகிறார்கள்:

பாஞ்சாலி பாவத்தை உணர்த்தி நெஞ் சைத் தொடும்படி தன்னுடைய பாகத் தைப் பாராட்டும் படியாகச் செய்கிறார்.

துச்சாதனன் பாஞ்சாலியைக் கூந்தலில் பிடித்து வருவது நன்றாக இருக்கிறது.

பாத்திரங்கள் அனைத்துமே முழுமை யாக ஒன்றி இருக்கின்றன. பாத்திரங்கள் அனைத்திலும் இழையோடும் முகபாவம்! ஒருவர் அபிநயித்துக் கொண்டிருக்கும் போது மேடையில் நிற்கிற அனைவரும் கதையின் போக்கோடு ஒன்றி இணைந்து அனுபவித்துத் தம் நிலைகளில் பிரதிபலிக் கும் உணர்ச்சிகள்:

எந்த இடத்திலும் தொய்வு ஏற்படாத நடன அமைப்பு! இவை இந்நாட்டிய நாட கத்தில் அவதானிக்க முடிகின்ற சிறப்பு அம்சங்கள்:

இடையிடையே ஜதிகளைப் புகுத்தி அழகான அபிநயமும் திரைகளுடன் அரு மையாக — ஒரு நாட்டிய நாடகத்தின் முழு மையுடன் நடன அமைப்பைச் செய்து கோவையாக்கி நெறிப்படுத்தியிருக்கிறார் திருமதி ஆழ்வாப்பிள்ளை:

பாடசாலை நடன ஆசிரியையான இவர் அடையாறு இலக்ஷ்மணின் மாணவி. தன் னுடைய பெயரைப் பிரபலப் படுத்தாது அடக்கமாக இருக்கும் இவரின் ஆற்றலைப் பாஞ்சாலி சபதத்தில் பார்க்கின்ற போது ஆச்சரியமாகவே இருக்கிறது. நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவர்.

பின்னணி இசை, பாட்டு நாட்டிய நாடகத்துக்கு உயிரூட்டுகிறது: கல்லூரி மன்ற இசை ஆசிரியர் திரு. ஆனந்தசிவம் ஆரம்பத்திலேயே தன் பாடலால் கவர் கொள்ளச் செய்து விடுகிறார்:

பாஞ்சாலிக்கும் பின்னணியில் ஆண் குரலையே கொடாது பெண்குரல் கொடுக்க வேண்டும்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து பாடல்களைத் தெரிந்தெடுத்துக் கதையைத் தொகுத்தளித்துள்ளார் திரு: சோமசுந்த ரம் அவர்கள்.

மொத்தத்தில் "பாஞ்சாலி சபதம்" பாடசாலை ஒன்றின் தரத்திற்கு மிக உயர்ந் தது என்றே கூறவேண்டும்: இந்தவகை யில் இப்பாடசாலை முதல்வியும் பாராட் டுக்குரியவர்:

மலைநாடு கண்டேன்

அன்றொருநாள் மலைநாடு காணச்சென்றேன் - நான்
எங்கும் கண்டிராத வளங்கள் கண்டேன்
பூத்துக் குலுங்கும் நல்மரங்கள் கண்டேன் - நீர்
பொங்கிடச் செல்லும் நல்லாறு பலகண்டேன்.

கண்ணைப் பறிக்கும் கொக்கோச் செடியும் கண்டேன்
கருத்தைக் கவரும் இரப்பர் மரமும் கண்டேன்
எண்ணத்தில் பசுமை நிலைத்திடச் செய்யும்
எழில் மிகு தேயிலைச் செடியும் கண்டேன்.

அருவிகள் ஆங்காங்கே விழவும் கண்டேன்
அவற்றிலே சிறார் விளையாடக் கண்டேன்
கதிரவன் காணாத காடுகண்டேன் - அங்கு
காரிருள் படரும் குகைகளுங் கண்டேன்.

கண்டேன் கண்டேன் நான் மலைநாடு கண்டேன்
கவின்பெறு பசுந்தரை வானந்தொடக் கண்டேன்
நூலேணி போற்செல்லும் வீதிகள் கண்டேன்
நல்லோர் புகழும் நலங்கள் நான் கண்டேன்.

நளாயினி சோமசுந்தரம்,
8 A 1973.

நாங்கள் அரங்கேறினோம்

நிரை விலகுகிறது :

கண்ணன் சிலைமுன்பு கல்லும் கனியக் கானம் பாடுகிறாள் மீரா: அக்கான வெள்ளத்திலே மூழ்கிய அவளைக் கரம் பிடித்த மகாராணா வீணை மீட்டுகிறான். பார்த்திருந்தோர் எல்லோரும் பக்தி வெள்ளத்தில் மூழ்கி நிற்கின்றனர்;

கானமழை பொழிந்து ஓய்ந்துவிட்டது. கடமையே கண்ணாகக்கொண்ட காவலனைக் கடமை அழைக்கிறது. அவ்விடம் விட்டு அகலுகிறான் அரசன்.

எல்லா மதங்களையும் ஆராய்ந்து அவற்றில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்த அக்பர் பாதுஷா மீராவின் பக்திக் கானத்தைக் கேட்க மாறுவேடம் தரித்துத் தன் அதிகாரியுடன் மீராவின் பூஜை அறை நாடி வருகிறான்: அங்கே தன் கனவிலே கண்ணனைக் கண்டு அவனுடன் ஆடி மகிழ்ந்த மீரா அவனையே நினைந்து பக்தியில் பாடுகிறாள்: மறைந்து நின்று கேட்ட அக்பர் முத்துமாலையொன்றை அவள் கரத்தில் இட்டுச் செல்கிறான். கண்ணன் கனவில் மூழ்கி கையிலே மாலையுடன் இருக்கும் மீராவைக் காண்கிறான் மன்னவன். சந்தேகித்து, மீராவையே "ஏது மாலை?" என்கிறான். "யாரோ இருவர் முன்பின் தெரியாதவர்கள் கண்ணனுக்கு அர்ப்பணித்துச் செல்கின்றனர்" என்கிறாள் அந்தக் கள்ளமில்லாப் பெண்: தனது ஆட்சிக்கே மாறு ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிறான் மகாராணா; விசாரணை நடக்கிறது; அழைக்கப்பட்ட பொற்கொல்லன் அக்பர் அரண்மனையில் வாழும் தன் தம்பியின் கைப்பட்ட வேலை தான் அம்மாலை என்று அடித்துச் சொல்லிவிட்டான். அடுத்தது காட்டும் பளிங்கு போலச் சலனமற்ற உள்ளத்தைக் காட்டி நிற்கும் மீராவின் முகம் அவனைத் தயங்கச் செய்தாலும் கடமை வெல்கிறது. "மீராவுக்கு மரணதண்டனை" என ஓலை எழுதி மந்திரியிடம் கொடுக்கிறான்: ஓலையைப் பார்த்துப் பதறிய மந்திரி பதவி துறந்து செல்கிறார்; சிரச்சேத அதிகாரியை அழைத்துப் பணிக்கிறான் மன்னன்; இத்தகைய தண்டனையை நிறைவேற்ற வேண்டிய ஒரு பதவி தனக்கு வேண்டாம் என்று சென்று விடுகிறான் அவனும்: மன்னன் சீற்றமுறுகிறான். மீராவோ கலக்கமற்றுத் தன்னுல் மன்னனின் ஆட்சிக்கு மறு ஏற்படக்கூடாதெனநினைந்து அவனது சீற்றத்தைப்போக்க இன்முகத்துடன் மரண தண்டனையை ஏற்று அரண்மனையை விட்டு வெளியேறுகிறாள். அவள் சியாமளனைத் தேடிப் பிருந்தாவனத்தை நோக்கிச் செல்கிறாள். இதற்கிடையில் அரண்மனைக் காப்போன் வெளியே செல்லவிடாது தடுக்கிறான். பின் அவளைக் கண்டதும் பணிகிறான். "அரசி இந்தநேரத்தில் நீங்கள் தனியாகச் செல்கிறீர்களா?" என அவன் வினவ மீரா பிருந்தாவனத்துக்குச் செல்வதாகக் கூறுகிறாள்; அவன் மீராவை நோக்கி: "பிருந்தாவனத்துக்குச் செல்லும் வழி இதுவல்ல" எனக் கூறினான்; புன்சிரிப்புடன் மீரா "அப்பனே அன்பர்கள் எந்த வழியில் சென்றாலும் கண்ணனை அடையலாம் என்பது உனக்குத் தெரியாதா" எனக் கூறிக் காடும் மலையும்கடந்து பிருந்தாவனத்தை நோக்கிச் செல்கிறாள்; தன்னை மறந்து கண்ணனையே அடையும் ஒரே நோக்கத்துடன் "பண்டங்கள் உண்பதை மறந்தேன், பஞ்சணைத் துயிலும் மறந்தேன். கொண்டவன் நாமத்தை மறந்தேன், கூறிடும் பொருளெல்லாம் நீ தான் கண்ணா" என்று பாடியபடியே மலைமீது ஏறுகிறாள் மீரா;

சேவகன் மூலம் செய்தியறிந்த மகாராணா காடும் மலையும் கடந்து ஓடோடி வருகிறான். மன்னனின் "மீரா, மீரா" என்ற அலறலும், மீராவின் "கண்ணா, கண்ணா" என்ற கவிஞைசையும் மாறி மாறி எதிரொலிக்கிறது மலையிலே; இறுதியில் மலையேறிச் செல்லும் மீராவைக் காண்கிறான் மன்னவன். "மீரா, என்னை விட்டுச் செல்லாதே" என அலறுகிறான். மீராவோ கலக்கமின்றி "மன்னவனே, மனங் கலங்கவேண்டாம்; மனிதனாகி விடாதீர்

கள், மன்னனுகவேயிருங்கள், மக்கள் பல ரைக் காப்பதற்கு மாயவனே தந்த மன்னர் பதவி இது" என்று கூறி மலேமீது ஏறிச் செல்கிறுள். மலேயிலே தோன்றிய மாய வனுடன் இரண்டறக் கலந்த மீராவும் மாயமாக மறைந்துவிட்டாள். ஏங்கிய உள்ளத்துடன் திரும்பிய மன்னவன் காவில் "மீராவிற்கு மரணதண்டனே" என மன் னனே எழுதிய ஓலே தடக்குகிறது. சோர் வுடன் குனிந்தெடுக்கிறுன்: "பிரேம நதிக் கரையில் ஞான நடுநிசியில் சியாமளன் தரிசனம் தந்தான்; கனவு நனவாகிக் காதல் கனியாகிக் கண்ணனின் அருள் இன்று கனிந்ததம்மா" என்று காற்றினிலே கலக்கின்றது கீதம்;

திரை விழுகிறது;

மயங்கி நின்ற மண்டபம் மருள் நீங்கி விழிக்கிறது; கைதட்டல் ஒலி மண்டபத் திற்கு வெளியேயும் கேட்கிறது.

ஆம், நாம் தமிழ்த்தின விழாவில் "கண்ணனேக் காட்டிய கானம்" ஆக இப்படி அரங்கேற்றினேம், வெற்றியும் கண்டோம்.

பவானி தேவகிமணி,
9 விஞ். B.
(1.73)

அன்று ஓர் இரவு

"ஆகாய விமானம் புறப்படப் போகி றது; விரைவாக வா" என்று எனது நண்பி அவசரப்படுத்தினுள். 'ஏன்? எங்கே?' என்று கூடக் கேட்க நேரமின்றி எப்படியோ ஒருவாறு புறப்பட்டுக் கமலாவுடன் சென் றேன். 'அனுமதிச்சீட்டு இருக்கிறதா' என்று கேட்டேன். 'ஆம் இருவருக்கும் வாங்கிவிட்டேன்' என்ருள் கமலா.

விமான நிலேயத்தை அடைந்தோம்; விமானத்தில் ஏறி ஆசனத்தில் அமர்ந் தோம். ஆசனத்துடன் நாங்கள் நாடாக் களாற் கட்டப்பட்டோம். பயத்தினுல் நெஞ்சு 'திக், திக்' என்றது. "பயப்ப டாதே. மேலே பறக்கும்பொழுது நாம் பாதுகாப்பாக இருப்பதற்காகத்தான் கட்டு கிறுர்கள்; பின் கட்டுக்களேக் கழற்றிவிடு வார்கள்" என்ருள் கமலா.

அது சரி, புறப்படப் போகிறேம்; 'எங்கே போகின்றேம்?' என்று சொல்ல வில்லேயே. நான் வீட்டில் அம்மாவுக்குக் கூடச் சொல்லாமல் வந்துவிட்டேனே' என் றேன்; "நீ ஒரு மண்டு, நான் நேற்றே வந்து உனது அம்மாவிடம் கூறிப் பணமும் பெற்று வந்தேனே, தெரியாதா?" என்று கமலா கேலி செய்தாள்; 'எங்கே போகி றேம், என்று நான் திரும்பவும் கேட்டேன். 'அதுதான் இலண்டனுக்குப் போய் அடுத்த வாரம் திரும்பி விடுவோம். இதுகூடவா இன்னும் உனக்குத் தெரியவில்லே?' என் ருள் கமலா;

"அடி பைத்தியமே, இலண்டனுக்கா; இலண்டனே முன்பின் தெரியாத நாம் அங்கே போய் எப்படிச் சமாளிப்பது. அது தான் யாராவது தெரிந்தவர்கள் இருக்க லாம். அவர்கள் உதவியைப் பெறலாம். ஆனல் போகும் வழியிலே எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் சண்டையாமே; நாம் பறந்து செல்லும் வழியில் போர் விமான மென எண்ணி எங்கள் விமானத்தைச் சுட்டு விழுத்தினுல் எமது கதி?" என்று புலம்பினேன்;

'என்ன சகி, இப்படிக் கலங்குகிறுய்? போர் விமானத்துக்கும் இதற்கும் வேறு பாடு தெரியாமற் சுட்டு விடுவார்களா? சும்மா பயப்படாதே; போய் எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்' இது கமலாவின் தேறுதல் வார்த்தை.

விமானம் புறப்பட்டது. நாம் மேலே, மேலே போய்க்கொண்டிருக்கிறோம். கீழே நோக்குகிறோம். வீடுகள் எல்லாம் புள்ளி களாகத் தோன்றுகின்றன: விமானப் பயணம் சொகுசாகத்தான் தோன்றுகின் றது. ஆனால், எகிப்திய சண்டையை நினைத் தாலோ..... நடுக்கமெடுத்தது. போகின்ற வழியில் போர்வீரர் விமானத்தைச் சுட்டு விட்டால் .....

அது என்ன ஒரே இரைச்சலாக இருக் கிறதே, வெளியே எட்டிப் பார்க்கிறேன்: பல பிரங்கிகள் ஒன்றன்பின் ஒன்றாக எம்மை நோக்கி வருகின்றன. ''டமார், டுமீல், டும்,'' காது செவிடுபடும் சத்தம். ஏதோ எல்லாப் பக்கங்களிலுமிருந்தும் பெருந் தாக்குதல் நடைபெறுகிறது:

'டுமீல்' என்ற சத்தத்துடன் எங்கள் விமானமும் இயக்கமிழந்து கீழே விழுகிறது. எனது சப்த நாடிகளும் மொடுங்கி விட்டன: கமலாவையும் காணமுடியவில்லை: 'தடார்' கீழே வந்த விமானம் நிலத்திலே மோதிச் சுக்குநூறாகியது. ஆசனத்தின் ஒரு மூலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டேன்:

ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. எது வும் தெரியவில்லை. கண்விழித்தேன். நான் படுத்திருந்த தலையணையின் ஒரு மூலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தன என் கைகள்: மங்கிய விளக்கொளியில் அம்மா விற்கு அருகில் நான் படுத்திருப்பது தெரி கிறது. ஆம், எனது விமானப் பிரயாணம் கனவுதான் என்ற முடிவுக்கு வரச் சில நிமிடங்கள் சென்றன:

சகிப்பிரபா. கந்தசாமி,
6-ம் வகுப்பு, (1973)

எங்கள் ஊர்

எங்கள் ஊர் துன்னாலை: இது இயற் கைவளம் நிரம்பிய ஒரு பெரியகிராமம்: இங்கு பனங்காணிகள் அதிகம் உள்ளன: அவற்றினிடையே ஆங்காங்கு வேப்ப மரங் களும் காணப்படும். அந்த வேப்ப மரங் களே உறைவிடமாகக் கொண்ட கொக்கு கள்தான் எத்தனை: எங்கள் ஊரில் பல வயல்களும் தோட்டங்களும் உள்ளன. பாடசாலைகள், ஆலயங்கள் முதலியவற்றை யும் ஆங்காங்கே காணலாம். அந்த ஆல யங்களிலே கேட்கும் மணியோசையுடன் பறவைகளின் இன்னிசைக்கீதமும் சேர்ந்து ஒலிக்கும்: எங்கள் ஊரில் சட்டி பானை வனைவதற்கேற்ற மண் இருப்பதால் அது ஒரு பிரதான கைத்தொழிலாக விளங்கு கிறது: காலையில் ஆடுமாடுகள் மந்தை மந்தையாகச் செல்வது பார்ப்பதற்கு அழ காக இருக்கும். பருத்தித்துறையிலிருந்து கொடிகாமத்திற்கும், சாவகச்சேரிக்கும் செல்லும் பஸ்வண்டிகள் எங்கள் ஊருக் கூடாகச் செல்லும்: அதனால் எங்களுக் குப் பிரயாண வசதியுமுண்டு. எங் கள் ஊர் அமைதிக்கும் சுகத்திற்கும் உகந்த ஒரு கிராமம் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமையும் மகிழ்ச்சியு மடை கிறேன்:

கமலாதேவி. சோமசுந்தரம்,
5-ம் வகுப்பு,
(1973.)

கிளி

வீட்டில் வளர்ப்பதற்குக் கிளியைவிடச் சிறந்த பறவை வேறில்லை: கிளி பச்சை நிற உடலும் சிவப்புநிற அலகும் உடை யது: நாம் சொல்லிக் கொடுப்பதைத் திரும்பத் தன் கீச்சுக்குரலில் கிளி சொல் லும். அதைக் கேட்க ஆசையாக இருக் கும்: பச்சைக்கிளி, வெள்ளைக்கிளி, சாம் பல் நிறக் கிளி, சிவப்புத் தார்க்கிளி என்று பலவகையான கிளிகள் உள்ளன: உலகிலே சுமார் நூற்றறுபது வகையான கிளிகள் உள்ளனவாம். கிளிக்கு வாழைப்பழம்,

அத்திப்பழம் ஆகிய பழங்கள் மிக விருப்பம்; அது மிளகாய்ப் பழத்தையும் விரும்பி உண்ணும்; கிளி மரப்பொந்தில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும்; கிளிகள் பல காலம் வாழக்கூடியன;

நளினி, செல்வத்துரை
4-ம் வகுப்பு (1973)

எனது பூந்தோட்டம்

பூக்கள் மலர்ந்து நிறைந்துள்ள தோட்டம் பூந்தோட்டமாகும்; எங்கள் வீட்டில் உள்ள பூந்தோட்டத்தை 'எனது பூந்தோட்டம்' என்று நான் மகிழ்ச்சியுடன் கூறுவேன்; எனது பூந்தோட்டத்தில் பல வகையான பூங்கொடிகளும், செடிகளும் உள்ளன. அவற்றில் காலையிலும் மாலையிலும் பல நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும்; பூந்தோட்டத்தில் தேனீக்களும், வண்டுகளும் வந்து மலர் மலராகப் பறந்து தேன் எடுத்துச் செல்லும்; நானும் எனது தங்கையும் பூக்களைப் பறித்து மாலைகளாகவும் செண்டுகளாகவும் கட்டிச் சாமிப்படத்திற்கு வைப்போம்; விளையாடுவோம்; அம்மாவின் தலைக்குச் சூடுவதற்கும் கொடுப்போம்; ஒருநாள் நானும் என் தங்கையும் பூந்தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது எனது தங்கை ஒரு செடியை முறித்துவிட்டாள்; எனக்கு ஒரே கவலையாக இருந்தது. அதைக்கண்ட அப்பா அதேஇனப்பூச்செடி ஒன்றுகொண்டு வந்து தந்தார். நான் மிகவும் கவனமாக அதற்கு நீர் வார்த்து வந்தேன்; அது நன்கு வளர்ந்து இப்போது பூத்துக்குலுங்குகிறது; நாம் தினமும் தண்ணீர் ஊற்றி வளர்த்த பூச்செடிகளைப் பார்த்துப் பார்த்துச் சந்தோஷப்படுவோம்.

அன்புமதி, லோகநாதன்
4-ம் வகுப்பு (1973)

வண்டிக்காரன்

பலவகையான வண்டிகளை ஓட்டுபவர்களை வண்டிக்காரன் என்கிறோம்; ஆனால் 'வண்டிக்காரன்' என்றதும் நம் கண்முன்னால் தோன்றுபவன் மாட்டுவண்டிக்காரனே. இவன் தன் வண்டியில் பாரங்களையும், பிரயாணிகளையும் ஏற்றிச் செல்வான்; இவன் தனது மாடுகளையும் வண்டியையும் மிகக் கவனமாக வைத்திருப்பான். அவன் பாரத்திற்கும் தூரத்திற்கும் ஏற்றவாறு கூலியை வாங்குவான்; இவனின் மாடுகளைத் திருப்பிப் பாதைகளிற் செலுத்துவதற்கு இவன் மூக்கணாங் கயிற்றை வேண்டிய பக்கங்களுக்கு இழுத்துத் திருப்புவான்; மாடுகளை விரட்டுவதற்கு அவனின் கையில் ஒரு கோல் இருக்கும்; நீண்ட தூரம் செல்லும்போது இவன் பல சுவையான பாடல்களைப் பாடிக்கொண்டே செல்வான்.

காயத்திரி, பஞ்சரட்னம்,
வகுப்பு 3; (1973)

Students Section—English

THE MINISTER ARRIVES.....

It was the early hours of the 25th of March, 1974. A day of excitement. It was the day I had to go to the air port. I was a member of the School Band. The School Band had to go to the Palaly airport to receive the Education Minister on his first official visit to Jaffna. He was coming here on that day to open the School of Fine Arts at Ramanathan College.

We were all dressed up smartly, and went in a special bus at 7 a. m. The Vembadi Band also came to play with us. As there were other parades, Girl Guides, Cadets and St. John's Ambulance Brigades, we had to rehearse our marching and take up our various positions.

The rehearsal and waiting were longer than the Minister's programme at the air port.

The plane roared at a distance, the whistle blew, and we were all in position. As the plane rolled down the tarmac crowds of officials and party men rushed with garlands. As the plane's door flew open the garlands went round the Minister's neck. The garlands were many in number so that his face was hidden in a few seconds.

The band played the National Anthem. We did a counter march and led the Minister with march music to the specially erected platform at the air-port. As we continued to play slow music taking our position along with the other parades the Minister went round briefly inspecting the Guard of Honour of Guides, Scouts and Cadets of some schools.

Then the Minister took up his position on the platform. Many other officials were also seated on the platform. Then on the Minister rained garlands and garlands with continuous clapping.

A lamp was lit and a Muslim Prayer was chanted.

The Minister was welcomed by the Director of Education, Jaffna, a few speeches followed and then the Minister spoke. I remember a promise he made. He said he would set up a new University in the North and would bring the Prime Minister along with him for the opening of that University.

We played the Band and marched ahead along the gang way. The minister got into his car, and as we stood aside playing music, he waved off to us.

Many cars followed, and men standing around requested us to play on, so we played the Band till all the cars went out of the gates.

Niranjala Jeevanayagam
Grade 10

MAGIC IN OUR SCHOOL

Last year a group of magicians came to our school, to present a Magic Show named 'Akbar the Great'.

The show was in the school Hall. Music played from the time the show started to the very end. It was recorded music, and amplified too.

While he was performing the tricks he talked all the time, without ceasing. I felt it was to distract our minds, and keep our attention away from his actions.

I remember some of the magic performances. He took one ping pong ball and drew many more out of it.

He took a handkerchief and artfully turned it into a dove. He took a doll and made it talk. It went on saying something about our Principal and teachers. We all laughed. He took a paper held it like a cup, poured water into it and threw the water on a teacher's face. But when the teacher was asked to show her face to the audience, there was no water on her face. It was a dry face.

He called up a student, and showed us how he could cut her head off with a sword, and then show the complete girl. When he lifted his sword we were all greatly frightened, and felt like screaming out.

The magician made his wife lie on space with the head resting on a chair, and the toes on another. The chairs were placed 4 feet away from each other.

He did several tricks like these. Finally he swallowed a great part of a sword, and then pulled it out of his mouth.

The magician earned his living by performing these tricks. We paid him for his trouble. It was his intelligence and swiftness and regular practice, that made him a great magician today.

All the girls enjoyed his magic show. It was worth the money.

Mangalakumary Sathurukulasingam
Grade 10

'AUTOBIOGRAPHY OF THAMBU'

I am a beggar. I live in Amparai now. I was not born a beggar. I'll tell you how this happened.

Thirteen years ago, when I was forty years old. I was a rich man. I was working in a commercial office in Colombo.

I had a number of friends then. I liked gambling very much. I spent all my evenings playing this game with my friends. I was getting richer and richer. I won everytime. I built a new house of my own. I lived happily with my family.

I continued to gamble and had plans of my own. But alas, it was not the same. I lost everytime I played. My thirst for gambling made me play everyday. I lost all my savings. I lost my house. My family was starving. I lost my job. Then my friends left me alone. I went from house to house asking for help.

There were no suitable jobs for me in Colombo. So I went to Amparai to get a small job. My family had to be in Colombo.

When I was in Amparai I heard about a big flood in Colombo. I came immediately to see my family.

I found no trace of my wife and children. The neighbours told me that the floods had carried them away. The small huts in which they had lived were washed away with the floods.

I was left alone. No one cared for me. I did not get my job in Amparai again, because I stayed away in Colombo too long.

Now it was not worth earning without a family. When I felt hungry I went into the jungle and cut wood. I sold fire wood in Amparai town.

One day I accidentally cut my arm. It was a very bad cut. I was taken to the hospital. Since it could not be cured the doctor had to remove a part of my arm. It was my right arm. I could not work any more. Now I am going about begging for my food.

Bavani Nagaratnam
Grade 9

AN INTERESTING PERSON IN MY CLASS

She is dark and short. She is stout and round. Her face is bright. Her cunning eyes and smiling lips will tell you her story.

She is called Susila. She has nick names too. All the girls in the class call out to her in any name they choose.

She is a girl of many jokes. She can make a whole class laugh, and herself not laugh. That is how she escapes from all teachers. No one ever likes to betray her either. Susila can make the loudest noise in the class but yet is considered as a quiet girl by teachers.

Susila can make you laugh at anytime in class, on the play field, at assembly and even when the whole class is punished. No teacher or student can find out this girl, who is mostly at the bottom of all mischief in class.

Susila is a good actress too. When there is no teacher in class, she acts a play all by herself taking the part of every character in the play. Usually it is a play of many jokes. Susila will be the only girl acting and we, the 40 students are the audience.

She can argue her case like an advocate—So we call her ' G. G. '

She can explain problems like a teacher, in Mathematics, Biology, Chemistry or Physics. So at times we call her ' teacher ' too.

She is good and kind to all. If one does not bring her lunch to school, she offers part of hers or gives money to help a hungry girl. Susila is liked by everybody in class.

She has a sister and five brothers. They are good and kind too.

Because Susila is clever and hard working all the teachers like her very much.

Sobini Kulasingam
Grade 10 Sc.

A PICNIC

It was a Poya day in the year 1971. I was in Puttalam with my parents.

We decided to go to the Meenoya river side to spend a day on the sandy river bank. I had very little sleep that night. I got up at 4 a. m. to help my mother with the cooking.

Mother prepared fowl curry and string hoppers. She also made sandwiches for the way.

We set out in our car at 8 a. m. and reached the river side at 1 p. m.

First we selected a shady spot and spread mats. We sat down for sometime to take a bite and have a drink.

Then we changed into our bathing costumes for a dip in the river. We enjoyed jumping into the water and out.

There were no stones at the bottom. It was all white, soft sand. The water was clear and flowing gently. We could jump about and not hurt ourselves.

After a long stay in the water, mother had to force us to come out of the river for we never liked coming out of it.

After our bath we had our lunch of string hoppers and fowl curry. Mother did the serving. We each had a plantain leaf to eat on.

Ater the meal we relaxed on the mats. It was a cool and shady place. I did not like relaxing long. So after fifteen minutes

I went with my brother and sister, picking flowers.

We helped father for a while to wash the car, ran to the river to fetch water in small tins, this was great fun running to and fro.

It was past 5 p. m. Father reminded us that it was time to get back home, as the roads would get dark soon.

We picked up all our belongings, put them safely into the dicky of the car, got in and drove off.

It was a memorable picnic and a happy day for the whole family.

Tabitha Selvarajah
Grade 8

If I were a Doctor

If I were a doctor
How nice it would be;
To own a small car
With four wheels wee.

I'll drive early morning
To help the men suffering;
And work day and night
With all my strength and might.

I'll spend my leisure
For the sick and the needy;
And that will be my pleasure
Of my time to give very freely.

I'll help them with wealth
And I'll work with pain;
To give the sick all health,
And this will be my gain.

Vasuki Navaratnam

Grade 8

AN ACCIDENT

One day after school, we were waiting outside the school for the school bus.

Our play ground is opposite the school, and we were watching the senior girls playing net-ball.

The school bus had come and reversed without our notice. But one girl, Mary was standing with her back to the bus. She did not see the bus.

The bus driver reversed further. We all screamed 'Mary, Mary, the bus, the bus.' Before Mary could jump off, the bus knocked her down.

A teacher rushed to the spot and lifted the girl. Mary was bleeding. Mary fainted. The teacher took Mary to the hospital.

Mary was in the hospital for a week. We went to see her in hospital. She got better and came back to school. We were all very happy to see her in school.

Sivajini Ahamparam
Grade 7

MY BIRTHDAY

My birthday was on the 29th of July. My mother made a pretty frock for me, a frock to be worn on that day. I invited all my friends to spend the day with me. They all gave me presents. I got presents from my parents too.

My birthday cake was in the shape of a Teddy Bear. It was nice and tasty. It was iced. My aunties baked the cake for me.

I had another cake too. This was a heart shaped one. It was iced with roses and leaves.

One of my uncles had a camera and took many photographs of me and my friends.

The postman brought many birthday cards from friends, and cousins. The radio also wished me a happy birthday.

My uncle came from Kurunegala for my birthday. It was a great day of happy thoughts.

Suganthini
Grade 6

ALL ISLAND RANGER SERVICE CAMP, 1973

Five of us, Rangers from Methodist Girls' High School, left for Kandy to attend the All Island Ranger Service Camp held at Hasalakka from the 20th to the 24th of August, where we had to clear a site for a play-ground. We left Point-Pedro on the 18th night, and we stayed at Pushpadana College, Kandy on the 19th night.

We got into the bus to Hasalakka at 6-30 a. m. on the 20th and travelled for about 45 miles. Forty Rangers from various schools from Anuradhapura, Ratnapura, Kandy, Colombo, Kurunegela, Polannaruwa and Jaffna had come for the Service Camp. Among them were 8 Tamils and 2 Muslims. The others were all Sinhalese. We were divided into five groups, with a leader for each group. We started our service at Hasalakka on the 20th.

First we cleaned the place, removed all the stones and levelled the ground. We slept for two hours under the shade of a tree after having lunch. We were very worried about snakes, as that area was known for its snakes. We spent the nights at the D. R. O's office in Minipe.

On the 21st morning we went to the worksite and continued cleaning the grounds and started to mark out a net-ball court. We made the necessary measurements and dug holes in the ground. It was difficult to dig as the ground was full of stones and very hard. But because of our hard-work, we were able to lay the foundation and cement it by evening.

The organizer, the Division Commissioner of Kandy, was pleased with our work and so took us to the Mahiyangana forest at her own expense the next morning. We went in a hoodless lorry. So we enjoyed the trip very much. First we went to the Buddhist temple there. Then we went to the place where the famous Veddah, Tissahamy had lived. We saw the Veddah huts. The headman of the Veddahs told us that they ate maize. He added that his followers would not allow anyone to come into that area without permission.

He showed us how to use a bow and arrow. We took photographs of him while he was shooting the arrow. We gave him some money and left on foot to see some of the other areas. The Ranger Commissioner and Guiders also joined us.

We completed the play ground on the 22nd. We put up the net-ball posts on either sides of the court. Then we had a net-ball match between the Rangers and Guiders and much to our surprise the Guiders won the game.

After this there was a game between the Hasalakka girls and Rangers. This time the Rangers won the game.

On the 24th we returned to Kandy and came back home.

The service camp gave me immense opportunities to move in society and among other Rangers. I hope I will get many more chances of attending such Service Camps.

Kanagambihaimalar Chelliah
(A Ranger)

மன்ற அறிக்கைகள்

உயர்தர மாணவர் மன்றம்

தலைவர் :	1972	பிரபாவதி அருளையா
	1973	ஜெயம் பொன்னையா
	1974	இரதிவதனி கந்தப்பு
செயலாளர் :	1972	இந்திராணி வேலுப்பிள்ளை
	1973	மனோன்மணி முருகேசு
	1974	பிரேமஜயந்தி இராஜரட்னம்
காப்பாளர் :	1972	திருமதி. இ. சாமுவேல்
		திருமதி. ஆர். ஜெயராஜசிங்கம்
	1973	திருமதி. ஆர். ஜெயராஜசிங்கம்
		திருமதி. க. புவனசுந்தரம்
	1974	திருமதி. கு. தவரட்னம்
		திருமதி. கு. தேவராஜா

எமது உயர்தர மாணவர் மன்ற அறிக்கையினை உங்கள்முன் வைப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். வரலாற்றின் இரண்டாம் நாளில் பாடசாலை மண்டபத்தில் ஒருங்கு சேரும் நாம் ஆக்கம் அளிக்கும் பேச்சுக்களையும், விவாதங்களையும், நாடகங்களையும், சென்றமிழ்ந்தும் ஆங்கிலத்திலும் மாறிமாறி நடாத்தி மகிழ்ந்திருக்கிறோம். பெண்குலத்திற்கே பெரும் பிரச்சனையாகத் தோன்றும் விடயங்களில் குறிப்பாக "சீதன வழக்கம் அறவே ஒழிய வேண்டும்" "பெண்ணுக்குரிய இடம் வீடு" என்பவை பற்றி ஆதரித்தும் எதிர்த்தும் எமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். தினப் பத்திரிகை விளம்பரம் சேகரித்தலில் போட்டி நடாத்தினோம். 'கரவைக் கிழார்' போன்ற பெரியார்களின் அரிய கருத்துக்களைப் பெற்றுப் பயன்பெறும் சந்தர்ப்பங்களையும் ஆக்கிக்கொண்டோம்.

1972-ம் ஆண்டு எமது ஆலோசக ஆசிரியராக இருந்து எமது ஆக்கத்திற்கே ஊக்கமளித்து எமக்கு நல்ல வழிகாட்டியாக இருந்த தம் ஆசிரியை திருமதி. சாமுவேல் அவர்கள் அமரத்துவம் அடைந்தமை எம்மை ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்ந்தியுள்ளது. அவர்களின் ஆன்மா சாந்தியடைய அவர் வாழ்ந்து காட்டிய அரிய பண்பின் வழி நடப்போமாக.

நாம் நம் அதிபரின் ஆசியுடனும் ஆசிரியர்களது ஆதரவுடனும் நீதியரசர் அரசு வோல்ரன் அவர்களையும் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு மகேசு அவர்களையும் முறையே 1973-ம், 1974-ம் ஆண்டுகளில் பிரதம விருந்தினராக அழைத்துத் தேநீர்விருந்து நடாத்தினோம். எம்மை அடுத்துள்ள பாடசாலை உயர்தர மன்றச் சகோதர சகோதரிகளையும் அன்புடன் அழைத்து ஒருங்கு சேர்ந்து நம் கேண்மை காட்டி மகிழ்ந்தோம். எங்கள் இவ்வைபவம் விளையாட்டுகள் போன்ற பல நிகழ்ச்சிகளால் சிறப்புறப் பெரிதும் உதவிய எங்கள் ஆசிரியை செல்வி, ம. அருளந்தி அவர்களுக்கு நாம் என்றும் நன்றிக் கடன் பாடுடையோம்.

வல்வை சிதம்பராக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி. கருத்தரங்குகளில் பங்கு பற்றிப் பயன் கண்டோம்.

எம் ஆக்கப் பணிகளுக்கெல்லாம் பூரண ஆதரவு நல்கிய எம் அதிபர் அவர்களுக்கும், நாம் அயராது உழைக்கப் பக்கத் துணையாக நின்று வழிகாட்டிவரும் பொறுப் பாசிரியைகளுக்கும் எம் மன்றத்தின் சார் பில் நன்றி கூறுகிறேன்.

பிரேமஜயந்தி இராஜரத்தினம்,
செயலாளர்.

சிரேஷ்ட மாணவர் தமிழ் மன்றம்

தலைவர் :	1972	சத்தியபாமா சரவணபவன்
	1973	செல்வ ஞானசோதி செல்லையா
	1974	ரமணி தம்பிமுத்து
செயலாளர் :	1972	லீலா சுப்பிரமணியம்
	1973	சிவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்
	1974	ரஜனி வடிவேலு
காப்பாளர் :	1972	செல்வி. ச. சின்னத்தம்பி
	1973	செல்வி. ப. சொக்கலிங்கம்
	1974	செல்வி. பூ. சபாபதிப்பிள்ளை

கலாசாலையில் காலடிவைத்த அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு வகுப்பிலும் நடாத்திவரும் மன்ற அனுபவத்துடன் சிரேஷ்ட பிரிவு மன்ற அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

வளரும் நம்மிடையே மொழி, இலக்கிய, பொது அறிவினை வளர்க்கும் பொருட்டும், கலையில் ஆர்வத்தினை ஏற்படுத்தும் பொருட்டும் எமது மன்றம் நிகழ்ச்சிகளை இருவாரங்களுக் கொருதடவை நிகழ்த்தி வருகிறது. "கண்ணகியா மாதவியா சிறந்தவள்?" "ஆங்கிலக்கல்வி அவசியமா இல்லையா?" "அரசாங்க உத்தியோகமா? விவசாயமா?" போன்ற விவாதங்கள், "கண்ணகி வழக்குரைத்தல்" "சிதைந்த யாழ்" போன்ற நாடகங்கள், இன்னும் பேச்சுப்போட்டிகள், பாட்டு, பொதுஅறிவு வினாவிடைகள் முதலியன குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளிற் சிலவாகும்.

எம்மன்றம் சிறப்புறச் செயலாற்றப் பணி புரிந்துவரும் எமது ஆசிரியர்களுக்கும், மன்றங்கள் அமைத்து மாணவர் நலங்காண உழைக்கும் அதிபர் அவர்களுக்கும் எமது நன்றி என்றென்றும் உண்டு.

ரஜனி வடிவேலு,
செயலாளர்.

The Senior English Literary Association

1972	1973	1974
President :		
Jeyaranie Ratnasingam	Jeyamanohary Somasundaram	Niranajala Jeevanayagam
Secretary :		
Selvathayalajothy Chelliah	Rajani Packiam	Sobini Kulasingam

Staff Advisers : Miss T. Velupillai
Mrs. R. Kulasingam

It is a privilege to submit the report of our Association for the past and present.

In spite of the various activities within and out of school, we have been able to carry out a fairly organised programme.

We have been having the usual fortnightly meetings on Tuesday afternoons. This gives sufficient time for the preparation by the students.

Most of the meetings are in the form of brief speeches on given topics, short stories, dramatisation, quizzes or competitions. Spelling competitions and guessing games create much enthusiasm among the students.

Unlike the Tamil meetings the speaking members are few, but great interest is shown in all group activities. Everyone likes to contribute something and also benefit something out of it.

It is heartening to note a marked improvement in the standard of English play acting.

We had to keep postponing our programme everytime there was a clash with our activities. Very often it was an elocution, singing, drama or games activity in which our members had to participate. These clashes are unavoidable and they are in a way helpful to the Association.

I should be failing in my duty if I do not express my sincere gratitude, not only to the committee, but also to the staff advisers for their immense help in the planning of our meetings.

Sobini Kulasingam,
Secretary.

வரலாற்று மன்றம்

தலைவர் :	1972	ஞானேஸ்வரி பொன்னையா
	1973	சந்திரா காத்தலிங்கம்
	1974	மனோன்மணி முருகேசு
செயலாளர் :	1972	சந்திரா காத்தலிங்கம்
	1973	சிவனேஸ்வரி கணேசபிள்ளை
	1974	ஜெயராணி இரட்னசிங்கம்
காப்பாளர் :	1972	செல்வி. த. சின்னத்தம்பி திருமதி. கு. தேவராஜா
	1973	திருமதி. கு. தேவராஜா திருமதி. லீ. சந்திரசேகரம்
	1974	திருமதி. லீ. சந்திர சேகரம் செல்வி. தி. இராமலிங்கம்

எமது வரலாற்று மன்ற அறிக்கையை உங்கள்முன் சமர்ப்பணம் செய்வதில் பெரு மகிழ்வு கொள்ளுகிறோம்.

மாணவர்களிடையே வரலாற்று அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் பெருக்கிட வேண்டுமென்ற நல்ல நோக்குடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட எமது மன்றம் இன்று வரை தன் கடமையினைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

வரலாறு பற்றிய அறிவு வளரும் வண்ணம் புரட்சித் தலைவர்கள், பெரியார்கள் பற்றிய சொற்பொழிவுகளும், வரலாற்று ஆண்டுகள், சம்பவங்கள் பற்றிய வினாவிடைப் போட்டிகளும், விவாதங்களும் இடம் பெற்றன. உலகின் வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடங்களை மாணவிகள் அறிந்திடும் வகையில் போட்டிகள் நடாத்தினோம்.

இவ்விதமான நிகழ்ச்சிகளின் மூலம் எமது உள்ளங்கள் வரலாற்றுத்துறையில் விரிவான விளக்கங்களைப் பெற்று வரலாற்றார்வம் மிக்கவர்களாய் மிளிர மன்றம் ஒன்றுமைத்து ஆதரவு அளித்திடும் அதிபர் அவர்களுக்கும், மன்றம் திறம்பட இயங்க எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்திட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கும் மற்றும் மன்ற அங்கத்தவர்களுக்கும் எமது மனங்கனிந்த நன்றிகள் பல.

எதிர்காலத்திலும் எமது மன்றம் ஏற்ற முற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

ஜெயராணி இரட்னசிங்கம்,
செயலாளர்.

புவியியல் மன்றம்

தலைவர் :	1972	இந்திராணி வேலுப்பிள்ளை
	1973	இந்திரா கணபதிப்பிள்ளை
	1974	குலராணி நடராசா
செயலாளர் :	1972	செல்வி. இந்திராணி வேலுப்பிள்ளை
	1973	செல்வி. வசந்தகுமாரி இராசையா
	1974	செல்வி. சிவகாமசுந்தரி சின்னையா
காப்பாளர் :	1972	திருமதி. ஜெ. தேவகடாட்சம்
	1973	திருமதி. ஜெ. தேவகடாட்சம்
	1974	திருமதி. ஆர். ஜெயராஜ சிங்கம்

எமது மாணவரிடையே புவியியல் சம்பந்தமான அறிவினை விருத்தியடையச் செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடன் எமது புவியியல் மன்றத்தின் அறிக்கையினைப் பெரும் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் உங்கள்முன் சமர்ப்பணம் செய்வதில் பெருமையடைகின்றோம்.

